வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 07.05.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 156 | பக்கங்கள் : 16

# நாளாந்த தொற்று எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடக்கும் ஆபத்து!

## நிலைமையை சமாளிப்பதற்காக இராணுவத்தின் தற்காலிக வைத்தியசாலையில் 1200 கட்டில்கள்



கொழும்பு, மே. 07

இலங்கையில் எதிர்வரும் நாட்களில் நாளாந்த கொரோனா தொற்றுக்கு இலக்காகும் நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 15

## அபாய வலயமாக மாறும் கிளிநொச்சி

கிளிநொச்சி, மே. 07

கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் கிளிநொச்சி மக்கள் மிகுந்த அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். 15

## யாழ்ப்பாணத்தில் மேலும் 20 பேருக்கு கொரோனா!

### வடக்கில் நேற்று 28 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 28 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து 15

## யாழ்ப்பாணத்தில் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2!

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ள நிலையில் குடாநாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண் 15

## நாட்டில் நேற்று மட்டும் 1,895 பேருக்கு தொற்று!

கொழும்பு, மே. 07

நாட்டில் நேற்று மட்டும் ஆயிரத்து 895 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 15


## வவுனியாவில் கடும் காற்று பப்பாசி நாசம்



வவுனியா, மே. 07

வவுனியா அராபத்நகர் பகுதியில் நேற்று வீசிய பலத்த காற்றினால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த பப்பாசிச் செய்கை பாதிக்கப்பட்டது. 15

## கொரோனா சிகிச்சை மையமாகும் வவுனியா பொருளாதார நிலையம்




வவுனியா, மே. 07

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. 15

## 230 படுக்கையுடன் கிளிநொச்சியில் புதிய கொரோனா மருத்துவமனை!



கிளிநொச்சி, மே 07

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கிளிநொச்சி - மலையாளபுரத்தில் 230 படுக்கைகளுடன் மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை நேற்றிரவு முதல் சேவைக்கு வந்ததாக கிளிநொச்சி 15

## ரிஷாத்தின் பதவியை பறிப்பதற்கு சபாநாயகர் இடமளிக்கமாட்டார்

### அதனைப் பாதுகாக்க வழிகள் உள்ளன என்கிறார் எஸ்.பி.திசாநாயக்க

கொழும்பு மே 07

“ரிஷாட் பதியூதீனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போவதற்கு பாராளுமன்றமும், சபாநாயகரும் எந்த சந்தர்ப்பத்திலும் இடமளிக்க மாட்டார்கள். அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாப்பதற்கு சில முறைகள் உள்ளன என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

“ரிஷாட் பதியூதீனின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போவதற்கு பாராளுமன்ற 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# ரயில் திணைக்களத்தில் பெரும் தொற்று ஆபத்து!

## எச்சரிக்கை விடுக்கின்றது தொழிற்சங்கம்

**கொழும்பு, மே07**

**ரயில் ஊழியர்களிடையே கொரோனா தொற்றின் பரவல் அதிகரித்து வருவதாகத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

இதனால் இலங்கை ரயில் திணைக்களம் கடுமையான ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளதாக ரயில் தொழிற் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதார வழிகாட்டுதல்கள், கொரோனா பரவுவதைத் தணிக்கவும் தடுக்கவும் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும், ரயில் அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதால் வைரஸ் பரவுவது வேகமாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் ரயில் அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், ஏராளமான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பதிப்படையக்கூடும். மேலும் இது பயணிகளையும் அதிக ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும் இலங்கை ரயில் தொழிற்சங்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

## இப்படியும் நடக்கிறது...!

சித்த சுவாதீனமற்ற ஒருவன் ஒரு மின் கம்பத்தைச் சுற்றிக்கொண்டே, ‘ஆண்டவனே, எனக்கு பத்து ரூபாய் கொடு,” என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவ்வழியே போன ஒருவர் அவன் மீது இரக்கப்பட்டு ஐந்து ரூபாய் கொடுத்துச் சென்றார்.

மறுநாள் மீண்டும் அவர் அப்பாதை வழியாக வரும்போது அந்த சித்த சுவாதீனமற்றவன் முன்போலவே, “ஆண்டவனே, எனக்குப் பத்து ரூபாய் கொடு,” என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

இவரைப் பார்த்தவுடன் அவன் உரக்க,“ஆண்டவனே, இம்முறை நீயே நேரடியாக பத்து ரூபாய் கெண்டு வந்து கொடு. நேற்று நீ பத்து ரூபாய் கொடுத்து அனுப்பிய ஆள் ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டு ஐந்து ரூபாய்தான் என்னிடம் கொடுத்தான். மகா திருடன்.” என்று கூவினான்.

கடந்த மே தினத்தன்று யாழ்பாணத்தில் உழைக்கும் பெண்கள் அமைப்பினர் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

கொரேனா தொற்று நாட்டை அல்லோலகல்லோலப்படுத்திக் கொண்டிருக்கும் இக்காலத்தில், தொழிலாளர் தினமான மே தினத்தன்று வழக்கம் போல நடத்தப்படும் ஊர்வலங்கள், கூட்டங்களுக்கு சுகாதாரப் பகுதியினரால் தடை விதிக்கப்பட்டிருந்த இந்தக் காலத்தில் இவ்வாறு போராட்டம் நடத்தியிருந்தனர்.

கொரோனா தொற்று காரணமாக பெண்கள் ஏதேனும் வகையில் பாதிக்கப்படுகிறார்களோ? அதனால் தான் இப்படி போராட்டம் நடத்துகிறார்கள் போலும் என்று நினைத்துக் கொண்டு அருகே சென்று பார்த்த போதுதான் விடயம் தெரிந்தது.

நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் பெண்களுக்கு முப்பது சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருந்தது.

பெண்களின் பிரச்னைகளை எதிர்கொள்ள பெண்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கை நியாயமானதுதான்.

ஒவ்வொரு தேர்தல்களின்போதும் அண்மைக்காலமாக வேட்பாளர்கள் அறிவிக்கப்படுகின்ற காலத்தில், ஒரு சில பெண்கள் போராட்டம் நடத்துவது வழக்கமாகி வருகின்றது.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சில பெண் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டபோது அதற்கு எதிராகவும் பெண்கள் சிலர் போராட்டம் நடத்தியிருந்தனர். அவர்களின் கோரிக்கை ஆண்களுக்கு எதிரானதாக இருக்கவில்லை. பெண்களுக்கு எதிரானதாக - கூட்டமைப்பு அறிவித்த பெண் வேட்பாளர்களுக்கு எதிராகவே போராட்டம் நடத்தியிருந்தனர்.

மே தினத்தன்று நடந்த போராட்டத்தின்போதும், வெற்றிபெற முடியாத வேட்பாளர்களையே கட்சிகள் தெரிவு செய்கின்றன எனவும், வெற்றிபெறக்கூடியவர்களை தெரிவுசெய்வதில்லை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். அது என்ன வெற்றிபெற முடியாதவர்கள் என்று தெரியவில்லை.

உதாரணமாக கடந்த பாராளுமன்ற தேர்தலில், கூட்டமைப்பு சார்பில் மறைந்த ரவிராஜ் அவர்களின் மனைவி சசிகலா வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். அவரின் வெற்றி தொடர்பாக சர்ச்சையும் சலசலப்பும் ஏற்பட்டிருந்தன. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அனந்தி சசிதரன் போட்டியிட்டிருந்தார்.

கூட்டமைப்பு கடந்த தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தது. அவர்களுக்கு வாக்களித்தவர்களில் சுமார் முப்பது வீதமானவர்கள் பெண்கள் என்று கணித்தாலும் (அதைவிட அதிகமாகவே இருக்கும்) 33 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள்.

இவர்கள் அனைவருமே தமது கட்சியில் போட்டியிட்ட ஒரேயொரு பெண் வேட்பாளருக்கு வாக்களித்திருந்தால் அவரே கட்சியில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருப்பார்.

பெண்கள் வேட்பாளராக இடம்கேட்டுப் போராடுவதை விடுத்து முதலில் போட்டியிடும் பெண் வேட்பாளருக்கு பெண்கள் வாக்களிக்க வேண்டும் என்று போராடவேண்டும்.

அதனை ஒரு பேரியக்கமாகவே அவர்கள் நடத்தவேண்டும்.

**- ஊர்க்குருவி.**

## இரத்தவங்கிகளில் குருதி பற்றாக்குறை

கொழும்பு, மே 07

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள இரத்தவங்கிகளில் குருதிக்கான பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால், இரத்ததானம் வழங்குவதற்கு முன்வருமாறு பொதுமக்களிடம் தேசிய இரத்தவங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இரத்ததானம் வழங்குமாறு கோரி தேசிய இரத்தவங்கி அதன் உத்தியோக பூர்வ முக நூல் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறது.

அப்பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவத்தொடங்கியிருக்கும் நிலையில், நடமாடும் இரத்ததான முகாம்களை அகற்றவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

எனவே உரிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி, இரத்த வங்கிக்கு வருகைதந்து இரத்ததானம் வழங்குவதொன்றே தற்போதுள்ள மாற்றுவழியாகும்.

உங்களால் இயலுமானவரையில் நாடளாவிய ரீதியிலுள்ள பிரதான வைத்தியசாலைகளுக்குச் சென்றோ அல்லது இரத்த வங்கியிலோ இரத்ததானம் வழங்குவதென்பது தற்போதைய சூழ்நிலையில் மிகப்பெரிய உதவியாக அமையும்.

குறிப்பாக ராகம, மஹரகம, குருநாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள இரத்தவங்கிக்கு காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரைக்குள் ஏதேனுமொரு நேரத்தில் சென்று இரத்ததானம் வழங்கமுடியும்.

இல்லாவிடின், https://nbts.health/ என்ற இணையமுகவரியின் ஊடாக உங்களுக்குப் பொருத்தமான நேரத்தை முன்பதிவு செய்துகொண்டு இரத்ததானம் வழங்குவதற்குச் செல்லமுடியும். அதேவேளை நாரஹன்பிட்டியிலுள்ள இரத்தவங்கி காலை 08.00 மணிமுதல் மாலை 06.00 மணிவரை திறக்கப்பட்டிருக்கும்.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என அனைத்து வயதையும் சேர்ந்த பலர் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ராகம, குருணாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள இரத்த வங்கிகளில் குருதி பெறுவோர் அதிகளவில் இருப்பதால், அங்கு குருதிக்கான கேள்வியும் உயர்வாகக் காணப்படுகின்றது.

அத்தோடு தலசீமியா நோயாளர்களுக்கு 10 - 14 நாட்களுக்கு ஒருமுறை குருதி உட்செலுத்தவேண்டிய தேவையுள்ளது. எனவே எதிர்வரும் வாரங்களில் இரத்தவங்கிக்கு அவசியமான குருதி கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்ப்பதாக அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துறைமுகநகர சட்டமூலம் தீர்ப்பு 18 ஆம் திகதி சபைக்கு

கொழும்பு, மே 07

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றின் தீர்ப்பு சபாநாயகருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த தீர்ப்பு சபாநாயகருக்கு கிடைத்ததாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும், 18 ஆம் திகதி குறித்த தீர்ப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## 42 மூடை மஞ்சளுடன் இருவர் கைது

கொழும்பு, மே 07

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பெரியவெங்காய விதை மற்றும் உலர் மஞ்சள் தொகையுடன் இரண்டு பேர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து பெரிவெங்காய விதைகள் அடங்கிய 27 மூடைகளும் உலர் மஞ்சள் அடங்கிய 15 மூட்டைகளும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு பொருட்களை சட்டவிராதமாக கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட கப்பல்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
07.05.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, சித்திரை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் நாட்டை நம்புதல்

பாரபட்சமில்லாமல், தமிழ்த் தேசியத்தை பிரநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் தலைவர்களும், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு. க. ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கின்றனர். ஈழத் தமிழ் மக்களின் வாழ்வில் ஸ்டாலின் ஒரு விடிவெள்ளியாக மலர்வார் என்பதுபோலவே அனைவரது வாழ்த்துச் செய்தியும் அமைந்திருக்கின்றது. வடக்கு – கிழக்கை பிரதிநிதித்துவம் செய்துவரும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், திராவிட முன்னேற்ற கழகத்தின் வெற்றியை வாழ்த்திக்கொண்டிருக்கின்றபோது, பிறிதொரு பிரிவினரோ, திராவிட முன்னேற்ற கழகத்தின் பெருந் தலைவரான முத்துவேல் கருணாநிதியை கடுமையாக விமர்சிக்கின்றனர். கருணாநிதி ஈழப் போராட்டத்திற்கு துரோகம் செய்துவிட்டாரெனக் கூறி வருகின்றனர். குறிப்பாக, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரின்போது, கருணாநிதி உண்ணாவிரதமிருந்து நாடகமாடினாரெனவும், யுத்தத்தை நிறுத்துவற்கு இந்திய அரசிற்கு அழுத்தங்களை கொடுக்கவில்லையென்றும் ஒரு சாரார் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறானவர்கள் குறிப்பாக, புலம்பெயர் தமிழ்த் தேசிய குழுக்களில் ஒருசாரார், சீமானின் வெற்றிக்காக பொருள் கொடுத்து காத்திருந்தனர். சீமானோ, விடுதலைப் புலிகளின் அடையாளங்களுடனும், சுலோகங்களுடனும் இயங்கிவரும் ஒருவர். ஆனால், சீமானால் ஓர் ஆசனத்தைக்கூட வெற்றிகொள்ள முடியவில்லை ஆனால், அவரின் வாக்கு வங்கி சற்று அதிகதிருக்கின்றது. ஆனால் ஜனநாயக அரசியலை பொறுத்தவரையில், ஒருவர் எத்தனை வாக்குகள் பெறுகின்றார் என்பதல்ல முக்கியம், மாறாக, அவர் ஆனசங்களை வெற்றிகொண்டிருக்க வேண்டும். அவ்வாறில்லாது, எத்தனை வாக்குகள் பெற்றிருப்பினும் அது பொருட்டல்ல. ஒருவேளை, சீமான் தி.மு.க அல்லது அ.தி.மு.க ஆகிய பிரதான கட்சிகளுடன் கூட்டணியமைத்திருந்தால் அவர் வெற்றிபெற்றிருக்கக்கூடும். ஆனால், சீமானால் எவருடனுமே கூட்டணியமைக்க முடியாது, ஏனெனில், அவரைப் பொறுத்தவரையில் அனைவருமே தவறானவர்கள். தி.மு.க. வெற்றி தொடர்பில் பேசியிருக்கும் சீமானோ, ஐந்து வருடங்களுக்கு தமிழ்நாடு சுடுகாடாகப்போவதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசிய அரசியல் எழுச்சிபெறத் தொடங்கிய காலத்திலிருந்து தமிழ்நாட்டின்மீதான எதிர்பார்ப்பு, ஈழத் தமிழ் அரசியல் இயக்கங்கள் மத்தியில் வேரூன்றியது. குறிப்பாக, அந்தக் காலத்தில் கோலோச்சிய அனைத்து ஆயுத இயங்கங்களுமே தமிழ் நாட்டையே தங்களின் கூடாரமாக பயன்படுத்தியிருந்தன. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பின்னர், இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் அறிக்கை வெளியிடுவதோடு தங்களின் ஆதரவை சுருக்கிக்கொண்டன.

குறிப்பாக கருணாநிதியை எடுத்துக் கொண்டால், ஆரம்பத்தில் தமிழர் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்தாலும்கூட, பின்னர் விடுதலைப் புலிகள் தலைமையிலான அரசியல்மீது கருணாநிதி ஆர்வம் காண்பிக்கவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கமானது, எம். ஜி. இராமச்சந்திரனுடன் (எம். ஜி. ஆர்.) நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதும் ஒரு முக்கிய காரணம். இந்த பின்புலத்தில், கருணாநிதி ரெலோ இயக்கத்திற்கே தனது ஆதரவை வழங்கிவந்தார். கருணாநிதியின் எட்ட நின்ற அரசியலை, இந்த பின்புலத்தில் தான் நோக்கவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, முதலில் தமிழ்நாடு தொடர்பில் ஒரு தெளிவான பார்வை இருக்கவேண்டியது அவசியம். தமிழ்நாட்டின் மீதான கரிசனை எங்கிருந்து ஆரம்பித்தது? இந்தியாவை கையாளும் ஒரு திறவுகோலாகவே ஈழத்து அரசியல்வாதிகள் தமிழ்நாட்டை நோக்கினர். இப்போதும் நோக்குகின்றனர். ஆனால், இந்திய வெளி விவகாரக் கொள்கையை கையாளுவதில் தமிழ்நாட்டினால் பெரியளவில் செல்லாக்குச்செலுத்த முடிந்ததா? இதுவரையான அனுபவங்களில் இல்லை என்பதுதான் பதில். இந்த அனுபவங்களிலிருந்து, தமிழர் தரப்புக்கள் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டியது அவசியம்.

# சரத் எதிர் சரத்: உண்மைகள் உறங்குவதில்லை!

- அலசுவது **இராஜதந்திரி** -



ஒருவர் தரையிலும் மற்றையவர் கடலிலும் தமது பொது எதிரியாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மூன்று தசாப்தகாலம் இடம்பெற்ற யுத்தத்துக்கு தலைமைத்துவம் வழங்கியிருந்தனர். இவர்கள் வேறுயாருமல்லர். ஒருவர், இராணுவ தளபதியாகவிருந்த பீல்ட் மார்ஷல் சரத் போன்சேகா. மற்றையவர், கடற்படையின் உயர்மட்ட தளபதிகளில் ஒருவராக இருந்த அட்மிரல் சரத் வீரசேகர.

ஆனால், தற்போது இந்த இரு ஆயுதப் படை முக்கியஸ்தர்களும் அரசியலில் ஈடுபட்டு, ஒருவர் ஆளுந்தரப்பு உறுப்பினராகவும் மற்றையவர் எதிர்தரப்பு உறுப்பினராகவும் பாராளுமன்றத்தில் அங்கம் பெறுகின்றனர். இந்நிலையில், தமது வாதப்பிரதிவாதங்கள் மூலமாக மூன்று தசாப்தகால யுத்தத்தின்போது இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து இந்த இருவரும் வெளியிட்டு வரும் தகவல்கள், கடந்த காலங்களில் மூடிமறைக்கப்பட்ட பாரதூரமான சம்பவங்கள் பலவற்றை தற்போது வெளிச்சத்துக்கு கொண்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. வடக்கு-கிழக்கு யுத்தத்தின்போது பல்வேறு வடிவிலும் யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றன என்றே தெரிவிக்கப்பட்டு வருவதோடு, ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் பிரேரணையில்கூட யுத்தக்குற்றங்கள் என்று குறிப்பிடப்பட்டவை குறித்து சர்வதேச ரீதியிலான விசாரணையின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வியப்புக்குரிய தகவல்கள்**

ஆனால், யுத்தக்குற்றங்கள் இடம்பெறவில்லை என ஆளுந்தரப்பு குறிப்பிட்டுவருகின்ற நிலையில், மிருசுவிலில் இடம்பெற்ற பன்னிரெண்டு மனிதப் படுகொலைகள் உட்பட வேறுபல இராணுவ ரீதியான அத்துமீறல்கள் குறித்து பாராளுமன்றத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட முக்கிய தளபதிகள் மூலமாகவே பிரஸ்தாபிக்கப்படுவது வியப்புக்குரியதாகவே இருக்கின்றது. ஆளுந்தரப்பின் அட்மிரல் சரத் வீரசேகரவைவிட, எதிர்தரப்பின் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வடக்கு-கிழக்கு யுத்தம் குறித்து நிறையவே அனுபவமுடையவராக இரக்கின்றார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின்போது கடலில் இடம்பெற்ற யுத்தத்தை விட, தரையிலேயே அதிகளவு சவால்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் பலமடைந்திருந்தன. எது எப்படியிருந்தபோதிலும், கடலிலும், தரையிலும் மட்டுமல்ல. ஆகாயமார்க்கமாக மேற்கொள்ளப்பட்ட யுத்தங்களின்போதுகூட பெருமளவில் அத்துமீறல்கள் இடம்பெற்றிருந்ததையே அவதானிக்க முடிந்தது.

**பாராளுமன்றத்தில் சான்றுகள்**

இந்நிலையில், யுத்தத்தின்போது முக்கிய தளபதிகளாக இருந்த இருவர் யுத்தக்குற்றங்கள் என்று கருதப்பட்டவை குறித்து வாதப் பிரதிவாதங்களை நடத்துவதன் மூலம் யுத்த குற்றச்சாட்டுகளுக்குரிய சான்றுகள் பாராளுமன்றுக்குள்ளேயே கிடைத்து வருகின்றமை, உண்மைகள் உறங்குவதில்லை என்பதையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும், அட்மிரல் சரத் வீரசேகரவும் இராணுவத்திலோ அல்லது கடற்படையிலோ சாரதாரண அதிகாரிகளாக பணியாற்றியிருக்கவில்லை. இந்த இருவருமே தாம் அங்கம் பெற்ற ஆயுதப்படைகளில் மிக உயர்வான நிலையில் பணியாற்றியிருந்தனர்.

எனவே, மிக உயர்வான பதவிகளை வகித்த இந்த இரு ஆயுதப்படை முன்னாள் முக்கியஸ்தர்கள், வாய்க்கு வந்தவாறு ஒருவரை ஒருவர் தாம் வெளியிடுகின்ற தகவல்களுக்கு மத்தியில் மிக மோசமாக தரங்கெட்ட பேச்சுகளால் திட்டித்தீர்ப்பதை பார்க்கும்போது, இவர்கள் தாம் பணியாற்றிய காலங்களில் படைத்தரப்பினருக்குரிய ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அனுசரித்திருந்தனரா? என்பது கூட கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில், அவர்களுக்குக்கீழே பணியாற்றிய அதிகாரிகள் உட்பட சாதாரண சிப்பாய்களின் ஒழுக்கக் கட்டுப்பாடுகள்கூட கேள்விக்குரியனவாகவே இருக்கின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதங்களின்போது ஒரு கட்டத்தில் சரத் வீரசேகர, விடுதலைப் புலிகளை விடுதலை செய்தபோது எதிர்க்காத சரத் பொன்சேகா, மிருசுவிலில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக சிறைவைக்கப்பட்ட இராணுவ வீரர் விடுதலை செய்யப்படுவதை எதிர்க்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, இராணுவ வீரர் என்றிருப்பவர் தனது மனம் போன போக்கில் கொலைசெய்ய முற்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வதா? என்று கேள்வி எழுப்பியதோடு, மேலும் பேசுகையில், யுத்தத்தின் பின்னர் விடுதலைசெய்யப்பட்ட பன்னிரெண்டாயிரம் விடுதலைப் புலிகளையும் கொலைசெய்துவிடுவதா? என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். இந்நிலையில், யுத்தத்தின்போது இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் அத்துமீறல்கள்பற்றி பாராளுமன்றத்தில் ஆயுதப்படைகளில் பணியாற்றிய முக்கியஸ்தர்களே பிரஸ்தாபிக்கும்போது, உண்மைகள் உறங்குவதில்லை என்பதனை நினைவில் கொள்ளவேண்டியதாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 7 வெள்ளிக்கிழமை**
பிலவ வருடம் - சித்திரை -24
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**07.05.2021**

**மேடம்**
வேலைச்சுமை அதிகமாகும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள். குடும்பத்தினரின் ஆதரவு பெருகும். பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். எதிர்காலத்துக்கான திட்டங்கள் தீட்டும்போது கவனம் தேவை.

**இடபம்**
பணியாளர்களின் நிலை உயரும். முயற்சி நிறைவேறும். பொதுநல விஷயத்தில் ஆர்வமாக ஈடுபட்டு மகிழ்ச்சி அடைவீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் உதவுவர்.

**மிதுனம்**
பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு நிம்மதி அடைவீர்கள். புதிய மாற்றம் ஏற்பட நல்லவர்கள் உதவுவர். பிரச்னைகள் தீரும். நல்லன நடக்கும் நாள். புதிய நட்பால் உற்சாகம் அடைவீர்கள்.

**கடகம்**
உயர்ந்தோருக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிப்பீர்கள். புதிய நபர் வருகை பற்றி கவனம் தேவை. அதிகப் பேச்சு வேண்டாம். சிறுசிறு இழப்புகள் ஏற்படும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள். பணியில் உயர்வு வரும். புதிய யுக்திகளை கையாண்டு முன்னேறுவீர்கள். திறமை கூடும். உறவுகளில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கன்னி**
பணியாளர்கள் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக உழைப்பீர்கள். குடும்பத்தினருடன் இன்று மகிழ்ச்சியாக நேரம் செலவழிப்பீர்கள். நண்பர்களுக்கு நன்மை செய்வீர்கள். சஞ்சலங்கள் தீரும்.

**துலாம்**
நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்னை தீரும். நிம்மதி நிலைக்கும். வியாபாரிகள் சிறுசிறு மாற்றங்கள் செய்து லாபம் அடைவீர்கள். சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**விருச்சிகம்**
உறவினர்களால் முன்பு ஏற்பட்டிருந்த வருத்தங்கள் குறையும். மற்ற மதத்தவர்களால் நன்மை உண்டு. வெளிநாட்டிலிருந்து நற்செய்தி வரும். பல காலம் நீங்கள் செய்த கடின உழைப்பும், முயற்சியும் பலன் தரும்.

**தனுசு**
குடும்பத்தில் சமீபத்தில் காணாமல் போயிருந்த மகிழ்ச்சி மீளும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். நன்மை உண்டு. குடும்பம் மகிழும். பணியாளர்களுக்குப் புதிய நன்மைகள் கிடைக்கும்.

**மகரம்**
உங்களைச் சற்று மாற்றிக் கொள்வதன் மூலம் நன்மை அடைவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்க நல்லோர் ஆலோசனை உதவும். நெருங்கிய ஒருவரை மகிழ்விக்க நீங்கள் செய்த முயற்சி பலிக்கும்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளராதீர்கள். வாழ்க்கைத் துணை ஆதரிப்பார். பணியாளர்கள் பழைய தவறுகளுக்குத் இன்று தீர்வு காண்பீர்கள். தனிப்பட்ட முறையில் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

**மீனம்**
உழைப்புக்குப் பலன் நிதானமாகத்தான் கிடைக்கும். பொறுமை தேவை. தேவையற்ற கவலைகளை மனதில் அனுமதிக்க வேண்டாம். ஆரோக்கிய பிரச்னையில் இருந்து மீண்டு நிம்மதியடைவீர்கள்.

# தமிழகத்தின் முதல்வராக இன்று பதவியேற்கின்றார் ஸ்டாலின்

## ஆளுநர் மாளிகையில் எளிமையாக நிகழ்வு



**சென்னை, மே 07**
**தமிழக முதல்வராக, தி.மு.க., தலைவர் ஸ்டாலின், இன்று காலை, 9:00 மணிக்கு பதவியேற்க உள்ளார். ஆளுநர் மாளிகையில், எளிமையாக விழா நடக்கிறது. அனைத்து அமைச்சர்களும் பதவியேற்பு உறுதிமொழி ஏற்றதும், ஸ்டாலின், தலைமை செயலகம் சென்று, முதல்வர் பொறுப்பேற்கிறார்.**

தமிழக சட்டசபை தேர்தலில், தி.மு.க., 133 இடங்களில் வெற்றி பெற்று, பெரும்பான்மை பலத்துடன், ஆட்சியை பிடித்துள்ளது. இதனையடுத்து சென்னையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ, தேர்தல் முடிவுகளை, கவர்னரிடம் வழங்கினார். அன்று மாலை, தி.மு.க., - எம்.எல்.ஏ.,க்கள் கூட்டம், அறிவாலயத்தில் நடந்தது. அதில், தி. மு.க., சட்டசபை கட்சி தலைவராக, ஸ்டாலின் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை, 10:30 மணிக்கு, ஸ்டாலின், கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகைக்கு சென்றார். அவருடன், தி.மு.க., பொதுச் செயலர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மை செயலர் கே. என்.நேரு, எம்.பி., - ஆர்.எஸ். பாரதி ஆகியோர் சென்றனர். கவர்னர் பன்வாரிலால் புரோஹித்தை சந்தித்த ஸ்டாலின், அவருக்கு பொன்னாடை போர்த்தி, மலர் கொத்து வழங்கினார். பின், முதல்வராக பொறுப்பேற்க உள்ள ஸ்டாலினுக்கு, கவர்னர் வாழ்த்து தெரிவித்தார். இந்த நிலையில் தமிழகத்தின்புதிய முதலமைச்சராக ஸ்டாலின் இன்று காலை ஆளுநர் முன்பாக பதவியேற்கின்றார்.

# அழகிரிக்கு பொலிஸ் பாதுகாப்பு ஸ்டாலின் அதிரடியாக உத்தரவு

சென்னை, மே 07

முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கவுள்ள தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவு போட்டுள்ளாரெனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, முதல்வராக பதவி ஏற்கவுள்ள தி.மு.க. தலைவர் ஸ்டாலினுக்கு மு.க.அழகிரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.



2021 சட்டமன்றத் தேர்தலில் தனிப் பெரும்பான்மை பெற்று தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.க. தலைவர் மு. க. ஸ்டாலின் நாளை காலை 9 மணியளவில் முதல்வராகப் பதவி ஏற்கவுள்ளார். அவருக்கு முன்னாள் முதல்வர் பழனிசாமி உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள், திரை பிரபலங்கள் என பலரும் வாழ்த்துகளை கூறி வருகின்றனர்.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் ஸ்டாலினுக்கு, அவரது சகோதரரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மு.க.அழகிரி வாழ்த்து தெரிவித்திருக்கிறார்.

“முதலமைச்சர் ஆகவுள்ள ஸ்டாலினை பார்த்து பெருமைப்படுகிறேன், எனது தம்பியான மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துகள். தி.மு.க. தலைவர் ஸ்டாலின் நிச்சயம் நல்லாட்சி தருவார்” என்று கூறி வாழ்த்துக் கூறியிருக்கிறார் அழகிரி.

முன்னதாக, மு.க,அழகிரி திமுகவிலிருந்து நீக்கப்பட்டார். தற்போது தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு நாளை தி.மு.க. ஆட்சி அமைக்கவுள்ள நிலையில் மு.க.அழகிரி, தன்னுடைய தம்பி மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சி தலைவர் யார்? பன்னீர், எடப்பாடி பனிப்போர்

சென்னை, மே 07

அ.தி.மு.கவின்சட்டமன்ற உறுப்பினர்கள்கூட்டம்இன்று அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

தேர்தல் முடிவுகள் அ.தி.மு.கவுக்கு எதிராக அமைந்ததால், முன்னாள் துணை முதல்வரும் அ.தி.மு.க வின் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் தேனி மாவட்டத்திலும், முன்னாள் முதல்வரும்இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி சேலம் மாவட்டத்திலுமே இருந்தனர். இந்தக் கூட்டத்துக்காகத்தான் அவர்கள் சென்னை புறப்படுகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக யாரைத்தேர்ந்தெடுப்பது என்ற கேள்விக்குப் பதில் காணும் முயற்சியில் அ.தி.மு.கவின் முக்கியஸ்தர்கள் தீவிரமாக இருக்கிறார்கள். முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமிதான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க வேண்டும் என்றும், அ.தி.மு.கவின் தற்போதைய எம்.எல்.ஏ.க்களில் பலர் எடப்பாடியைதான் ஆதரிக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள்அவரது ஆதரவாளர்கள்.

# குணச்சித்திர - நகைச்சுவை நடிகர் பாண்டு காலமானார்

சென்னை, மே 07

தமிழ் சினிமாவின் பிரபல நகைச்சுவை நடிகர்பாண்டு நேற்று காலை சென்னையில் காலமானார்.

குணச்சித்திர நடிகர் இடிச்சபுளி செல்வராஜின் சகோதரரான பாண்டு 1989ஆம் ஆண்டு பிரதாப்போத்தன், ஸ்ரீப்ரியா ஆகியோர் நடிப்பில் ஜி.என்.ரங்கராஜன் இயக்கத்தில் வெளியான ‘கரையெல்லாம் செண்பகப் பூ’ படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார். சுமார் 180க்கும் மேற்பட்ட படங்களில் நகைச்சுவை, குணச்சித்திர பாத்திரங்களில் நடித்திருக்கிறார்.



ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த் சத்யராஜ் மோகன், அஜீத், விஜய், சரத்குமார் மற்றும் இன்றைய இளம் நடிகர்கள் நடித்த படங்களில் நகைச்சுவை, குணச்சித்திர பாத்திரங்களில் தனது நடிப்பு ஆளுமையை அழுத்தமாகப்பதிவு செய்தவர் நடிகர் பாண்டு.

சின்ன தம்பி, திருமதி பழனிசாமி, உள்ளத்தை அள்ளித்தா, காதல் கோட்டை, ஏழையின் சிரிப்பில், பணக்காரன், பாட்டுக்கு நான் அடிமை, இதயவாசல், நாளைய தீர்ப்பு, வால்டர் வெற்றிவேல், நாட்டாமை, பம்மல் கே.சம்பந்தம், வரலாறு, வில்லு உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்துள்ளார். பாண்டு, வயது முதுமையின் காரணமாக நடிப்பதை குறைத்துக்கொண்டு ஓய்விலிருந்து வந்தார். இந்நிலையில் கொரோனா தொற்று ஏற்பட்டு, பாண்டு மற்றும் அவரது மனைவி குமுதா இருவரும் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்த சூழலில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி பாண்டு உயிரிழந்தார்.

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தாது அரசு!

கொழும்பு, மே 07

**மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தா திருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட் டத்தின்போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவி வரும் தற்போதைய சூழ் நிலையில் மாகாண சபைத் தேர் தலை நடத்துவது சிறந்த விடய மல்லவென இதன்போது ஆளுந் தரப்பின் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நாட்டில் தற் போதைய சூழ்நிலையில் தேர்த லொன்றை நடத்துவதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் காணப் படுவதாக பொதுஜன பெர முனவின் அமைப்பாளர் பஷில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.



## சிறிசபாரத்தினத்தின் 35ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 07

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 35 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று உரும்பிராய் பகுதியில் அவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் மெர்சல் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 5,400 பேர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே 07

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய 5,486 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளதோடு, அவர்களில் 5,400 பேருக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர் பில் நேற்று வியாழக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறை வடைந்த 24 மணித்தி யாலயத்திற்குள் 238 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 5,486 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களுள் 5,400 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேல்மாகா ணத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 2,103 நிறுவ னங்கள் சோதனைக்குட் படுத் தப்பட்டுள்ளன. இதன்போது 3,473 நபர்கள் கண்காணிக்கப் பட்டதோடு அவர்களுள் 7 பேர் வரை கைது செய்யப்பட்டுள் ளனர்.

மேல்மாகாணத்தில், களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளில் அங்காடி விற்பனையாளர்கள் 275 பேர் சோதனைக்குட் படுத்தப்பட்டதுடன், அவர்க ளுள் முகக்கவசம் அணியாது இருந்தவர்களுக்காக அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டது. இவர்களுள் 72 பேர் உடனடி அன்ரிஜென் பரிதோனை ளுக் குட்படுத்தப்பட்டனர். எனி னும் இதன்போது ஒரு தொற் றாளர்கள் கூட அடையாளம் காணப்பட வில்லை-என்றார்.

## இந்தியாவைவிட இலங்கையில் தொற்று பரவும் வேகம் அதிகம்

கொழும்பு, மே 07

இந்தியாவில் கொரோனா பரவும் வீதத்தை விட இலங் கையில் கொரோனா பரவும் வேகம் அதிகம் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோ தகர் சங்கத்தின் செயலாளர் எம் பாலசூரிய இந்த விடயத்தை தெரிவித்தார்.

இந்தியாவின் சனத்தொகை மற்றும் இலங்கையின் சனத் தொகைக்கமைய பதிவாகும் எண்ணிக்கையுடன் ஒப்பிடு கையில் இது தெளிவாவதாக வும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த தமிழ் சிங்கள புது வருடத்தின் பின்னர் நாளாந்தம் 1,900 அண்மித்த கொரோனா தொற்றாளர்கள் பதிவாகி வருவதாக அவர் சுட்டிக்காட் டினார்.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை மு.காவுடன் இணைந்து தரமுயர்த்த முடியாது

### கூட்டமைப்பிடம் கூறுகிறார் வியாழேந்திரன

கொழும்பு, மே. 07

முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்து கொண்டு கல்முனை வடக்கு உப பிரதேச செயல கத்தை தரமுயர்த்தலாம் என தமிழ் தேசியக்கூட்டமைப்பு நினைத்தால் அது பகல் கனவு. இந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களின் எதிரிக ளாகவும் விரோதிகளாகவுமே செயல்படுகின்றனர் என இரா ஜாங்க அமைச்சர் எஸ்.வியா ழேந்திரன் தெரிவித்தார்.



கோவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப் படும் தற்போதைய நிலைமை கள் குறித்த நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் சபை ஒத்தி வைப்பு விவாதத்தில் உரையாற் றும் போதே அவர் இதனை கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

முஸ்லிம் காங்கிரஸினர் தந் திரமாகவும் இராஜதந்திரமா கவும் காய்களை நகர்த்துபவர் கள் அவர்கள். கல்முனை வடக்கு உப பிரதேச செயல கத்தை தரமுயர்த்த உதவுவார் கள் என தமிழ் தேசியக் கூட்ட மைப்பினர் பகல் கனவு காணக் கூடாது.

அவர்கள் உங்களுடன் சுமூகமான உறவை,விட்டுக் கொடுக்கும் உறவை கொண்டி ருப்பார்களேயானால் கல்முனை வடக்கு உப பிரதேச செயல கத்தை தரமுயர்த்த தமது இணக் கத்தை வெளிப்படுத்திக் காட் டட்டும் பார்க்கலாம் என சவால் விடுக்கின்றேன்.

கிழக்கில் நாம் முஸ்லிம் மக்களுக்கு பல விட்டுக்கொடுப் புக்களை செய்துள்ளோம். அக்கரைப்பற்று பிரதேச சபை ஒரே நாளில் மாநகர சபையானது.

மட்டக்களப்பில் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் கல்வி வலயம் உருவானது. அம் பாறைக்கு தனி ஆர்.டி.எஸ். அலு வலகம் உருவானது. இப்படி எத்தனையோ விடயங்களை நாம் விட்டுக்கொடுத்து வந்தோம் ஆனால், கல்முனை வடக்கு உப பிரதேச செயலக விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸினர் கல் முனை தமிழ் மக்களின் ஒட்டு மொத்த எதிரியாகவும் விரோ தியாகவுமே செயல்படுகின்றனர்.

அதிலும் ஹரிஷ் எம்.பி. அப்பட்டமாக தமிழர் விரோ தியாக செயல்படுகின்றார். சாணக்கியன் எம்.பி. செவ்வாய்க் கிழமை இங்கு என்னைப்பற்றி சில விடயங்கள் கூறினார்.

அவர் பாராளுமன்றத்துக்கு புதியவர். அவர் 4 ஆர்ப்பாட் டங்கள் செய்திருந்தால் நான் 40 ஆர்ப்பாட்டங்கள் செய்தவன். அவர் போகப்போக புரிந்து கொள்வார். இங்கு முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யும் உள்ளார். இந்த விடயத்தில் முஸ்லிம் எம். பி.க்கள் தடையாக இருக்கக் கூடாது என அவரும் எடுத் துக்கூற வேண்டும்-என்றார்.

இதன்போது எழுந்த முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்கள் எல்லாம் உங்கள் அரசோடுதான் இருக் கின்றனர். அவர்களுடன் நீங்கள் பேச முடியும் தானே எனக் கேட்டார்.

இதனையடுத்து எழுந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல் வம் அடைக்கலநாதன் , இரா ஜாங்க அமைச்சர் வியாழேந் திரனின் முயற்சியை பாராட் டுகின்றேன். அவர் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தொடர்பில் இன்னும் முனைப் பாக செயல்பட வேண்டும் என கோருகின்றேன்.

அதற்கு எமது ஆதரவை வழங்குவோம் என்றார்.அப் போது மீண்டும் எழுந்த இரா ஜாங்க அமைச்சர் வியாழேந் திரன். செல்வம் அடைக்கல நாதன் எம்.பி.க்கு நன்றி. அவர் போன்று முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யும் இவ்விடயத்தில் எமக்கு ஆதரவு வழங்க வேண் டும்-என்றார்.

## சுகாதார நடைமுறைகளை மீறிய ஆலய நிர்வாகிகளுக்கு தனிமை

வவுனியா, மே 07

வவுனியாவில் சுகாதார வழி முறைகளைப் பின்பற்றாத ஆல யத்தினர் மூவர் சுகாதார பரி சோதகர்களால் சுய தனிமைப் படுத்தபட்டனர்.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெரு, ஞானவைரவர் ஆலயத்தில் சுகாதார வழிமுறை களை பின்பற்றாது சுமார் 50 இற்கு மேற்பட்டவர்களுடன் கடந்த செவ்வாய்கிழமை மாலை அட் டமி பூசை நடைபெற்றது.

இதன்போது குறித்த ஆல யத்துக்கு விஜயம் செய்த சுகா தார பரிசோதகர்கள் ஆல யத்தை பார்வையிட்டதுடன், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமை தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் மூவ ருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக ஆலய குரு, உபய காரர், ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் என மூவர் சுகாதார பரிசோதகர்களால் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

## தொடர்ந்து சேவையாற்ற விரும்புகின்றேன் சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, மே 07

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவால் கனடா வுக்கான தூதுவராக நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தன்னை கன டாவுக்கான தூதுவராக நியமித் தமைக்கு நன்றி தெரிவிப்ப தாகவும், எனினும் நாட்டில் தங்கியிருந்து தொடர்ந்தும் பொது மக்களுக்கு சேவை புரிய தான் விருப்புகிறார் என வும் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா ஜனாதிபதிக்கு அறி வித்துள்ளார்.

சட்டமா அதிபரின் ஒருங் கிணைப்பு அதிகாரி அரச சட் டத்தரணி நிஷாரா ஜயரத்ன இதனை தெரிவித்தார்.

## வவுனியா வைத்தியசாலைக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

வவுனியா பொது வைத்திய சாலையின் பணிப்பாளராக பதவியேற்ற வைத்திய கலாநிதி ஜெறல்டின் நிலக்சன் நேற்று பதவியேற்றார்.

வைத்திய கலாநிதி ஜெறல் டின் நிலக்சன் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் ஆவார்.

இதுவரை பணிப்பாளராக கடமையாற்றிய வைத்திய காலாநிதி காண்டீபன் தனது கற்றல் செயற்பாடுகளுக்காக சென்றுள்ள நிலையிலேயே இவர் பணிப்பாளராக நியமிக்கப்பட் டுள்ளார்.

# கொரோனா தடுப்புக்கு தேசிய சபை அமைக்க தவறிவிட்டார் ஜனாதிபதி!

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 07**

**தேசிய அனர்த்தம் ஒன்று ஏற்பட்டிருக்கும்போது அதற்கு முகம்கொடுக்க தேவையான தேசிய சபையை அமைக்கும் பொறுப்பை ஜனாதிபதி தட்டிக் கழித்திருக்கின்றார். அதனால் நாடு எதிர்கொண்டுள்ள அனர்த்த நிலைமைக்கு அனைவரும் இணைந்து தீர்வுகாண தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையை விரைவாக அமைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கோவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

நாட்டில் சுகாதார பாதிப்பு ஏற்படும்போது அதனை கட்டுப்படுத்த சட்டமூலம் ஒன்று இல்லை என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் இருக்கும் சட்டத்தையேனும் பின்பற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கத்துக்கு முடியாமல்போயிருக்கின்றது.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் தற்போதும் அமுலில் இருக்கின்றது. அந்த சட்டத்தை தற்போது அமுல்படுத்தலாம். நாட்டில் தேசிய பேரழிவொன்று இருக்கும்போது, அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க தேசிய சபை ஒன்றை ஜனாதிபதிக்கு அமைக்க முடியும். ஆனால் அந்த நடவடிக்கையை ஜனாதிபதி தட்டிக்கழித்திருக்கின்றார்.

மேலும் நாடு எதிர்கொள்ளும் பேரழிவின்போது இந்த சட்டத்தின் அடிப்படையில் தேசிய சபை ஒன்றை ஏற்படுத்துவது ஜனாதிபதியின் கடமை. அந்த சபையில் எதிர்க்கட்சித் தலைவர், கட்சித் தலைவர்கள் உள்ளடங்குகின்றனர்.

ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என இரண்டு தரப்பினரும் இணைந்து இந்த பிரச்னைக்கு தீர்வொன்றை தேடிக்கொள்வதற்கான சபையாகும். இந்த சபையை இன்னும் அமைக்காமல் இருப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

அத்துடன், தேசிய பேரழிவு தொடர்பான சபை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடுவது கட்டாயமாகும். அப்படி இருந்தும் இந்த தேசிய சபை இதுவரை அமைக்கப்படாமல் இருப்பது கவலையளிக்கின்றது. அதனால் விரைவாக இந்த சபையை அமைத்து, எதிர்க்கட்சியினரையும் இணைத்துக்கொண்டு இந்த கொவிட் பிரச்னைக்கு முகம்கொடுக்க வேண்டும்.

அத்துடன் கொவிட் நிலைமையை பயன்படுத்திக்கொண்டு மத வேறுபாட்டை ஏற்படுத்த முற்படுவதாக அரச தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். அரச பலத்தை பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம் மக்கள் வாய்திறக்க முடியாதவகையில், குறிப்பாக அக்குரணை, அட்டுளுகம போன்ற முஸ்லிம்கள் பரவலாக வாழும் பிரதேசங்கள் மாதக்கணக்கில் முடக்கி வைக்கப்பட்டிருந்தன.

சில வங்குரோத்து ஊடகங்களும் இதனை தொடர்ந்து காண்பித்து, முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில்தான் கொவிட் பரவுவதான பிரசாரத்தை மேற்கொண்டுவந்ததையும் நாங்கள் கண்டோம்.

அரசாங்கம் தங்களது இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்காக முற்றாக அழிக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கு பதிலாக, பிரதான துரோகியாக முஸ்லிம் மக்களை ஏற்படுத்திக்கொண்டு, நடவடிக்கை மேற்கொள்ளும் அரசாங்கமாகவே இந்த அரசாங்கத்தை நாங்கள் காண்கின்றோம்.

அதனடிப்படையிலேயே கொரோனாவில் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய முழு உலக நாடுகளும் அனுமதித்திருந்த நிலையில், முஸ்லிம்களை பழிவாங்கும் வகையில் இலங்கையில் மாத்திரம் எரிப்பதற்கு மாத்திரம் அனுமதித்திருந்தது.

இறுதியில் ஜெனிவாவில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே, அடக்கம் செய்ய அனுமதி வழங்கவேண்டி ஏற்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன் - என்றார். (அ)

## திருமணத்திற்கு அனுமதி கோரி அலைந்து திரியும் மணவீட்டார்

கொழும்பு, மே. 07

திருமணம் செய்ய அனுமதிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு பலர் வருகைதருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை திருமணம் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருமண நாள் நிச்சியிக்கப்பட்டு உள்ளதாகவும், இந்த நாட்கள் தவறினால், அடுத்த திருமண நாட்கள் மாத கணக்கில் தள்ளிப்போகும் நிலை உருவாகியுள்ளதாகவும் அதனால் மிக எளிமையாக இரு வீட்டாருடனாவது திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, சிலர் நீண்ட நாட்களாக திருமண நாட்கள் கூடாமல், திருமணம் கைகூடாமல் தோஷங்களால் பாதிக்கப்பட்டு இருந்து தற்போது நாள் குறித்துள்ள நிலையில் குறித்த நாளில் திருமணம் நடத்த முடியாவிட்டால் பின்னர் வருடங்கள் கடந்தும் திருமணம் கைகூடாது என ஜோதிடர்கள் கூறியுள்ளதாகவும், அதனால் மிக எளிமையாக, கடுமையான சுகாதார கட்டுப்பாடுகளுடனாவது திருமணத்தை நடத்த அனுமதிக்குமாறும் கோரி வருகின்றனர்.

ஆனால், நாடளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய திருமணம் உள்ளிட்ட எந்த நிகழ்வுக்கும் அனுமதி வழங்க முடியாது என சுகாதார வைத்திய அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்த முதியவரின் சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

### இறுதிச் சடங்கில் குழப்பம்

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவருக்கு கோவிட் - 19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஆராய்ந்து வருவதாக பதில் பணிப்பாளர் மருத்துவர் ச.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாநகரைச் சேர்ந்த 77 வயதுடைய முதியவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவருக்கு உடனடியாக அன்ரிஜென் பரிசோதனை செய்தபோது கோரோனா வைரஸ் தொற்று இல்லை என அறியப்பட்டுள்ளது. எனினும் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்தன.

முதியவர் அன்றைய தினமே 7ஆம் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். அவர் அங்கிருந்து 9ஆம் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் உயிரிழந்தார்.

இந்த நிலையில் சடலம் நேற்று முன்தினம் நண்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் நேற்று முன்தினம் மாலை வெளியாகிய பி.சி.ஆர் பரிசோதனை முடிவில் அவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனால், முதியவரின் உடலை சுகாதார முறைப்படி தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டுள்ளது.

இதனால், இறுதிச் சடங்கில் பதற்றமான நிலை காணப்பட்டது.

## கொரோனா அபாயத்தால் இலங்கையர் மலேசியாவுக்குள் பிரவேசிக்கத் தடை!

கொழும்பு, மே. 07

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவரல் தீவிரமடைந்துள்ள நிலையில் இலங்கையர்கள் மலேசியாவுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தடையை மலேசிய அரசு விதித்துள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாட்டவர்கள் வருவதற்கும் மலேசிய அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் இருந்து பயணிகள் வருவதற்கு மலேசியா தடை விதித்திருந்த நிலையில், நேற்று முன்தினம் முதல் மலேசியாவில் விதிக்கப்பட்டுள்ள புதிய கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் இணைந்ததாகக் கொரோனா அச்சுறுத்தல் அதிகமாகவுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தோர் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 20 ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே. 07

கோவிட் பரவல் அதிகரித்துள்ளமையினால் இரவு அஞ்சல் ரயில் உட்பட 20 தொடருந்து சேவைகள் நேற்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனை ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

## இலங்கை – இந்தியா இடையே விமான சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, மே. 07

இந்தியாவில் இருந்து இலங்கைக்கான பயணிகள் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சிவில் விமான சேவைகள் அதிகார சபை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பைத் தொடர்ந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ)

## புளியம்பொக்கணையில் 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே. 07

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் 22 லீற்றர் கசிப்பை பொலிஸார் கைப்பற்றியதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

(அ)

# நாட்டை காட்டிக் கொடுப்பதற்கான ஆவணமே துறைமுக நகர சட்டமூலம்

## ஹேஷா விதானகே குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 07

**நாட்டை மீண்டும் காட்டிக் கொடுப்பதற்கான ஆவணமே துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலமாகும். இதற்கு ஆதரவளிக்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் தாய் நாட்டை காட்டிக் கொடுத்தவர்களாகவே வரலாற்றில் குறிப்பிடப்படுவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் ஆட்சியின் பின்னர் மீண்டும் மேற்குலகத்துக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கான ஆவணமே துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலமாகும். இதனை அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சித்த போதிலும் அதிர்ஷ்டவசமாக அதற்கான வாய்ப்பு அற்றுப்போயுள்ளது.

எனவே நாட்டை நேசிக்கின்ற, மக்களின் வாக்குகளால் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் மனச்சாட்சியின் பிரகாரம் இதற்கு ஆதரவளிக்க முடியும். மாறாக ஆதரவளிப்பார்களாயின் அவர்கள் நாட்டை காட்டிக் கொடுத்தவர்கள் என்று வரலாற்றில் இடம் பிடிப்பார்கள்.

எனவே, இது தொடர்பில் நாம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவோம். முழுமையான மாற்றங்களுடன் வேறுபட்ட வகையில் இதனை திருத்தியமைத்து செயற்படுத்தவேண்டும். அவ்வாறின்றி இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பிரயோகிக்கப்படுகின்ற அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் நாட்டை பாகம் பாகமாக தாரை வார்ப்பதைத் தவிர, ராஜபக்ஷக்களுக்கு வேறுவழியில்லாமல் போயுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் மதிக்கின்றோம். நீதித்துறையை ராஜபக்ஷக்களால் விலைக்கு வாங்க முடியாமல் போயுள்ளது. பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களும் இது தொடர்பில் சிந்தித்து செயற்படவேண்டும். பகிரங்கமாக கருத்துக்களை தெரிவிக்க முடியாவிட்டாலும், பாராளுமன்றத்திலேனும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமாறு கோருகின்றோம்-என்றார்.

# வவுனியா பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று

வவுனியா, மே. 07

வவுனியா பொலிஸ் நிலையப் பெண் உத்தியோகத்தருக்கு கொரோனாவைரஸ்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் விடுமுறையில் சென்றிருந்தார்.

தற்போது மீண்டும் கடமைக்கு திரும்பிய நிலையில் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதில் அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புகையிலை அறுவடை ஆரம்பம்

வடமராட்சி மே 7

யாழ்.மாவட்டத்தில் புகையிலை அறுவடை வேகமாக நடைபெற்று வருவதுடன்அதன் விலையும் அதிகரித்துள்ளது.

அறுவடை செய்யப்படும் புகையிலைச் செடி ஒன்று தரநிர்ணயத்திற்கேற்ப

அதிஉச்ச விலையாக 500 ரூபாயாகவும் மிகக்குறைந்த விலையாக 300 ரூபாயாகவும் புகையிலைச் செய்கையாளர்களால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

புகையிலையை உலர்த்திப் பதனிட்டு சந்தைப்படுத்தும் வர்த்தகர்கள் போட்டி போட்டுக்கொண்டு அறுவடையாகும்

புகையிலையைக் கொள்வனவு செய்து வருகின்றனர். குறிப்பாக வடமராட்சியைச் சேர்ந்த புகையிலை வர்த்தகர்களே மிகக்கூடுதலாக புகையிலையைக் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பமான புகையிலை அறுவடை அடுத்த மாதம் வரை நீடிக்கும் என புகையிலைச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

(அ-2)

# யாழ்.மாநகரசபை ஊழியருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்.மாநகரசபை ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றிற்குள்ளாகியுள்ளார்.

மாநகரசபையின் வாகன பகுதியில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரின் பிசிஆர் அறிக்கை நேற்று முன்தினம் இரவு வெளியானது. அதில், அவருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

அந்த ஊழியர் கொழும்புக்கு சென்று வந்துள்ளார். இதையடுத்து, அவரின் பி.சி.ஆர்.மாதிரி பெறப்பட்டிருந்தது. அந்த ஊழியர் நேற்று முன்தினம் வரை கடமைக்கும் சமூகமளித்துள்ளார்.

இதையடுத்து, யாழ் மாநகர சபையில் கிருமி நீக்க நடவடிக்கை இடம்பெற்றதுடன், 13 மாநகர சபை ஊழியர்களும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

# 50 கிராம சேவகர்களுக்கு கொரோனா

கொழும்பு, மே. 07

50 கிராம சேவகர்களுக்கு கோவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளதாக இலங்கை கிராம சேவகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அதன் தலைவர் சுமித் கொடிகார இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், மேலும் 100 கிராம சேவகர்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனரெனவும் அவர் தெரிவித்தார்.

# கொரோனா தொற்றாளர் கொழும்பில் அதிகரிப்பு

கொழும்பு, மே. 07

நாட்டில் நேற்று முன்தினம் கோவிட்-19 தொற்றுறுதியான 1,939 பேரில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். கோவிட்-19 பரவல் கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையத்தின், நாளாந்த அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பிலியந்தலையில் 122 பேருக்கும், முல்லேரியாவில் 55 பேருக்கும், பாதுக்கையில் 51 பேருக்கும், கெஸ்பேவயில் 26 பேருக்கும், வெல்லம்பிட்டியில் 33 பேருக்கும், பத்தரமுல்லையில் 21 பேருக்கும் தொற்றுறுதியாகியுள்ளது.

அத்துடன், கல்கிசையில் 15 பேருக்கும், பொரளையில் 12 பேருக்கும், வெள்ளவத்தையில் 10 பேருக்கும் என கொழும்பு மாவட்டத்தில் மேலும் பல பகுதிகளில் பலருக்கு தொற்றுறுதியாகியுள்ளது.

# கிபிர் விமானங்களை புதுப்பிப்பது அவசியமா?

## சபையில் ஜனாதிபதியிடம் சஜித் கேள்வி



கொழும்பு, மே 07

தற்போது நாடு முகங்கொடுக்கும் கொரோனா நெருக்கடி நிலைமையில் கிபிர் விமானங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கை அவசியமா? என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

ஐம்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவழித்து கிபிர் விமானங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிபிர் விமானங்களைப் புதுப்பிக்க அரசு செலவிடவுள்ளது எனக் கூறப்படும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், அதேபோன்று உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள உடற்பயிற்சி கூடங்களுக்குச் செலவிடப்படவுள்ள 650 மில்லியன் ரூபாயையும் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்குச் செலவிடுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிதிகள் மூலம் கொரோனாத் தடுப்பு மருந்து, மருத்துவ உபகரணங்கள், படுக்கைகள், ஒக்ஸிசன், தடுப்பூசிகள், போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, "உடற்பயிற்சிக்கூடங்களுக்கான நிதி கொரோனா நிதியிலிருந்து பெறப்படவில்லை. அது வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி" என்று தெரிவித்தார்.

# வேறு எந்த திட்டங்களுக்கும் கொரோனா நிதி பயன்படாது

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதி



கொழும்பு, மே. 07

கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு எந்தத் திட்டங்களுக்கும் அரசு பயன்படுத்தாது என்று விளையாட்டு மற்றும்இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்புப் பணிகளுக்குத் தேவையான அனைத்து நிதிகளையும் நிதி அமைச்சர் ஒதுக்கியுள்ளார் எனவும் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது கூறினார்.

நாடளாவிய ரீதியில் அமைக்கப்படவுள்ள கொள்கலன் உடற்பயிற்சி மையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 600 மில்லியன் ரூபாய் நிதியைக் கொரோனாத் தடுப்புக்குப் பயன்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதியே இந்தத் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் எனவும் நாமல் மேலும் குறிப்பிட்டார்.

# ஸ்டாலின் முன் உள்ள சவால்கள் எப்படி எதிர்கொள்ளப்போகிறார்?

**விஷ்ணுப்ரியா ராஜசேகர்**



எந்தவொரு புதிய அரசும், ஆட்சி அதிகாரத்தில் காலூன்றி சுதாரிக்க ஆறு மாத கால அவகாசம் தேவை. ஆனால், அமையப்போகும் தி.மு.க. ஆட்சிக்கு எதிர்வரும் ஆறு மாதங்களும் அதீத நெருக்கடியான காலமாக இருக்கும். அதற்கு முக்கிய காரணம் கொரோனா இரண்டாம் அலை.

கொரோனா தொற்றின் முதல் அலையை தமிழ்நாடு ஏதோ சமாளித்து விட்டாலும், இரண்டாவது அலை என்பது அதை காட்டிலும் கடினமான தாகவே உள்ளது. எனவே கொரோனா தொற்றை முதல்வராக பதவியேற்கவுள்ள ஸ்டாலின் எவ்வாறு கையாளப் போகிறார், போதுமான தடுப்பூசிகளை மத்திய அரசிடமிருந்து எவ்வாறு பெற போகிறார் என்பதுதான் அவர் முன் உள்ள இமாலய சவால்களில் முதன்மையானது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

"கொரோனா இரண்டாம் அலை அதிக ஆபத்தானதாக உள்ளது. இளைஞர்களை தாக்குகிறது. இதுவரை பார்க்காத எண்ணிக்கையை காட்டிலும் இப்போது எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. முதல் அலையில் மருத்துவமனை படுக்கைகளுக்கு எந்த தட்டுபாடும் இல்லை. ஆனால், இந்த இரண்டாம் அலையில் ஐ.சி.யு. படுக்கைகள் தட்டுப்பாடு ஏற்படும் அளவிற்கு தீவிரமாக உள்ளது. அது போக இங்கேயும் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற நிலைமை இருப்பதுபோலவே தெரிகிறது. எனவே, தி.மு.கவினர் மிக நெருக்கடியான கால கட்டத்தில் தான் பொறுப்பை கையில் எடுக்கிறார்கள்." என்கிறார் மூத்த பத்திரிகையாளர் டி. சுரேஷ் குமார்.

கொரோனா பெருந்தொற்று நெருக்கடி என்பது வெறும் சுகாதார நெருக்கடி என்ற நிலையில் மட்டும் நின்று விடுவதில்லை. அது ஒரு பெரும் பொருளாதார நெருக்கடிக்கும் வித்திடும். எனவே பெருந்தொற்றால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டும் என்பதும் தமிழகத்தின் தற்போதைய பெரும் தேவை.

கொரோனா தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கையின் பெரும் பகுதியாக மாநிலத்தின் மக்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும் அது மத்திய அரசின் கையில் உள்ளதால் இதை கையாளுவதும் தி.மு.கவிற்கு பெரிய சவலாகவே இருக்கும் என்கின்றனர் மூத்த பத்திரிகையாளர்கள்.

"18-45 வயதினருக்கு தடுப்புசி போடுவது அடுத்தகட்ட நடவடிக்கை, அது மத்திய அரசின் கையில் உள்ளது. தி.மு.க. என்பது பா.ஜ.கவுக்கு எதிராக இருக்ககூடிய ஒரு கட்சி எனவே அதை கையாள்வதும் சவாலானதுதான். சரியாகக் கையாளவில்லை என்றால் மகராஷ்டிராவுக்கு வந்த சூழல் தமிழகத்துக்கு வந்துவிடும்." என்கிறார் மூத்த பத்திரிகையாளர் லஷ்மி.

பா.ஜ.க அரசை கடுமையாக விமர்சித்து வந்துள்ளது தி.மு.க. மேலும் தி.மு.கவுடன் கொள்கை அளவில் முரண் பாடு கொண்ட ஒரு கட்சி மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. எனவே, மத்திய அரசுடன் இணக்கமாக செல் வது என்பது ஸ்டாலின் முன் வைக்கப்பட்டுள்ள சவால் களில் ஒன்றாகவே இருக்கும்.

"2019ஆம் ஆண்டு தேர்தலில் வேறு எந்த தலைவரும் விமர்சிக்காத அளவிற்கு ஸ்டாலின் மோடியை கடுமையாக விமர்சித்திருந்தார். எனவே தி.மு.க. கடுமையான ஒரு பாஜக எதிர்ப்பு நிலை எடுத்திருந்த பட்சத்தில் அதை திருப்பி கொடுக்கவே பாஜக முயற்சி செய்யும்." என்கிறார் சுரேஷ் குமார்.

பெருந்தொற்றால் ஏற்படும் புதிய பொருளாதார நெருக்கடி, வேலையிழப்புகள், இவை எல்லாம் மாநிலத்தில் ஏற்கனவே இருக்கும் கடன் சுமையின் மீது கூடுதல் அழுத்தத்தை உருவாக்கும். எனவே புதியதாக வரும் அரசு நிதி மேலாண்மைக்கு பல்வேறு, துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை அதிகமாக உள்ளது.

"மாநிலத்தின் நிதி நிலைமைகள் குறித்து முந்தைய அ.தி.மு.க. ஆட்சி பெரிதாக கவனம் செலுத்தவில்லை. அதை சரியாக கையாளவில்லை. அதிக வட்டிகளில் பெரிய கடன்களை வாங்கியது. எனவே, ஸ்டாலின் பதவி யேற்கும் சமயத்தில் மாநிலத்தின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு அறிவித்துவிட வேண்டும். எந்த அளவிற்கு நிதியுடன் அவர் பொறுப்பேற்கிறார் என்பதை மக்க ளுக்கு தெளிவு படுத்திட வேண்டும்" என்கிறார் மூத்த பத்திரிகையாளர் இளங்கோவன்.

கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்ற பெரும் சவால்கள் உடனடியாக காத்திருந்தாலும், முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பெரும் போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் தூண்டிய முக்கிய பிரச்னைகளை தி.மு.க. அரசு எவ்வாறு கையாளவிருக்கிறது என்பதும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

அவ்வாறு முந்தைய ஆட்சிக்காலத்தில் எதிர்ப்புகளை உருவாக்கிய பிரச்னைகள் தேர்தல் சமயத்தில் பெரும் தாக்கத்தையும் செலுத்தியுள்ளது என்கிறார் பத்திரிகையாளர் இளங்கோவன்.

"10.5 சதவீத இட ஒதுக்கீடு என்பதையும் மீறி வட தமிழகத்தில் திமுக வெற்றி பெற்று இருப்பது எட்டு வழி சாலை பிரச்னையும் இந்த தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை சொல்கிறது. ஏனென்றால் மக்கள் தங்களின் நிலங்களையும், வாழ்வாதாரங்களையும் இழக்கும்படியான திட்டமாக அது உள்ளது. எனவே ஸ்டாலின் அதை மிக கவனமாக கையாள வேண்டும்" என்கிறார் இளங்கோவன்.

"அடுத்தபடியாக 'நீட்'டை பொறுத்தவரை தனி ஒரு மாநிலமாக தமிழ்நாட்டால் என்ன செய்ய முடியும் என்பது தெரியவில்லை. ஆனால், ஒரு வலுவான சட்ட நிபுணர்கள் கல்வியாளர்களின் ஆலோசனையை கொண்ட குழுவை அமைத்து கல்வியில் மாநிலத்தின் உரிமையை மீட்டெடுக்க என்ன செய்ய முடியுமோ அதை விரைவாக செய்ய வேண்டும்." என்கிறார் இளங்கோவன்.

இவைகளை தாண்டி, "தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பே இல்லை என்பது போல மத்திய அரசு கொண்டு வரும் திட்டங்களால் வட இந்தியர்களுக்கு அதிகமாக வேலை கிடைக்கும் சூழல் உள்ளது அதை தடுத்து தமிழர்களுக்கு வேலை என்பதை கொண்டு வர வேண்டும்." என்கிறார் வழக்கறிஞர் அருள்மொழி.

மேலும், பெண்களுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கின்ற வன்முறை போக்கு, ஆபாச தாக்குதல்கள், இவற்றை சரியான முறையில் வெறும் சட்டம் ஒழுங்கு

**" தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் தீவிரமாகியிருக்கும் நெருக்கடியான சூழலில் புதிய ஆட்சி அமையபோகிறது. மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதல்வராக பதவியேற்கவுள்ளார். அவர் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் என்ன? "**

நடவடிக்கையாக மட்டுமின்றி சமூக ஒழுங்கு நடவடிக் கையாக, பெண்ணுரிமைக்கு முன்னுரிமை கொடுத்து அதை செயல்படுத்தும் கடமைகளும் முதல்வராக பதவியேற்கவுள்ள தி.மு.க. தலைவர் ஸ்டாலினுக்கு உள்ளது என்கிறார் அருள்மொழி.

தமிழகத்திற்கு தி.மு.கவின் ஆட்சி புதியதில்லை என்றாலும், தற்போது கருணாநிதி அல்லாத ஒரு தி.மு.க. ஆட்சி அமையவிருக்கிறது. ஸ்டாலின் முதன் முறையாக முதல்வர் பதவியில் அமருகிறார். அந்த நிலையில் ஸ்டாலின் தனிப்பட்ட முறையில் முதல்வராக எவ்வாறு செயல்படுவார் என்ற எதிர்பார்ப்புகளும் உள்ளன.

"ஸ்டாலினை பொறுத்தவரை நல்ல அதிகாரிகளை தன் ஆலோசகராக உடன் வைத்துக் கொண்டு செயல்படும் ஒரு நபராகவே இருந்துள்ளார். அவர் சென்னை மேயராக இருந்த சமயத்திலும், துணை முதல்வராக இருந்த சமயத்திலும் சிறந்த ஐ.ஏ.எஸ் . அதிகாரிகள் குழுவை வைத்து கொண்டு அந்த குழுவிற்கு முழு சுதந்திரம் கொடுத்து அவர் செயல்பட்டுள்ளார். அது ஒரு நல்ல விஷயம். ஏனென்றால், தமிழ்நாட்டை பொறுத்தவரை அதிகாரிகளை சுதந்திரமாக செயல்படவிட்டால் அவர்கள் நல்ல முறையில் செயல்படும் நிலையில்தான் உள்ளனர்." என்கிறார் சுரேஷ் குமார்.

"அதேபோல எளிதாக அணுகும் ஒரு நபராகவே ஸ்டாலின் இருந்துள்ளார். துணை முதல்வராக இருக்கும் போது காலை நடைபயிற்சி செய்யும் சமயத்தில் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவார். அவர் ப்ரோ அக்டிவாக இருந்த ஒரு தலைவர் தான். எனவே தற்போது களத்தில் இறங்கி செயல்படக்கூடிய ஒரு தலைவராக இருப்பார் என்றே தோன்றுகிறது." என்கிறார் சுரேஷ் குமார்.

தனிப்பட்ட ரீதியில் மட்டுமல்ல தி.மு.க. என்ற கட்சியையும் தொடர்ந்து வலுவாக மாற்ற வேண்டும் என்றால் அக்கட்சி மீது கட்டமைக்கப்பட்டுள்ள இமேஜ்களை மாற்ற கடுமையாக செயல்பட வேண்டும் என்கிறார் லஷ்மி.

"அரசியல் ரீதியாக பார்க்க வேண்டுமென்றால் தற்போது ஒரு வலுவான எதிர்க்கட்சி அமைந்துள்ளது. அ.தி.மு.க. வலுவான ஓர் எதிர்க்கட்சியாக இருக்கும் போது இவர்களை கேள்வி கேட்க நிறைய ஆள் இருக் கிறார்கள் என்று அர்த்தம் அதுவும் பா.ஜ.கவுடன் இருக்கிறார்கள் அவர்கள் மத்தியில் ஆட்சியில் இருக்க கூடியவர்கள் எனவே எந்தஒரு திட்டமும் உடனடியாக முன்னெடுத்து செல்ல முடியாத ஒரு நிலை ஏற்படும். தி.மு.க. மாநில உரிமைகளை பேசும் கட்சி ஆனால் பாஜகவால் கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவே இது ஒரு பெரிய சவால்"

"தி.மு.கவுக்கு என்று கட்டமைக்கப்பட்ட பெயர்கள் எப்போதுமே உண்டு எனவே அந்த இமேஜை எப்படி உடைக்கபோகிறார் என்பது ஸ்டாலினுக்கு மிகப்பெரிய ஒரு சவால். இது அனைத்தையும் கடக்கவில்லை என்றால் மற்றொரு முறையும் தி.மு.க. வெற்றி பெறுவது சந்தேகமே." என்கிறார் லஷ்மி.

**நன்றி: பி.பி.சி.**

**டெஸ்ஸா வோங்**

# கொரோனாவை விரட்டிய ஆசியாவின் குட்டித்தீவு !

பல நாடுகள் தொடர்ச்சியான கோவிட் அலைகளை சந்தித்து வரும் நிலையில், ஒரு சிறிய ஆசிய தீவு உலகளாவிய தொற்று நோயை துரத்தியடித்த மிகச் சிறந்த இடமாக உருவெடுத்துள்ளது.

இந்த வாரம் சிங்கப்பூர் , ப்ளூம்பெர்க் கோவிட் மீட்சி தரவரிசை பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. நியூசிலாந்த் பல மாதங்களாக இந்த தரவரிசையில் முதலிடத்தில் இருந்தது. கோவிட் தொற்று எண்ணிக்கை, கட்டுப்பாடுகள் இன்றி வெளியே சென்றுவரும் சுதந்திரம் போன்ற காரணிகளை இந்தப்பட்டியல் கருத்தில் கொள்கிறது.

சிங்கப்பூரின் திறமையான தடுப்பூசி திட்டத்தை ஒப்பிடும்போது மெத்தனமான வேகத்தில் செயல்படுத்தப்படும் நியூசிலாந்தின் தடுப்பூசித்திட்டமே, அந்த நாடு இரண்டாம் இடத்திற்கு தள்ளப்படுவதற்கு முக்கிய காரணம் என்று ப்ளூம்பெர்க் தெரிவித்தது.

இந்த நிச்சயமற்ற கோவிட் காலங்களில் உலகின் மிகச் சிறந்த இடத்தில் வாழ்வது எப்படி இருக்கும்? உண்மையிலே சொல்லும் அளவிற்கு அது சிறப்பாக உள்ளதா?

சரி, இது பெரும்பாலும் உண்மைதான். சிங்கப்பூரில் வாழ்க்கை மிகவும் நன்றாக இருக்கிறது. இதை நான் சில எச்சரிக்கைகளுடன் சொல்கிறேன்.

சமீபத்திய மாதங்களில், அவ்வப்போது வெளிவரும் ஒருசில தொற்றுக்களை ஒடுக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமூக அளவில் தினசரி தொற்றுக்கள் கிட்டத்தட்ட ஏற்படுவதே இல்லை என்றே சொல்லலாம். ஆயினும் இந்த வாரத்தில் பல புதிய தொற்றுக்கள் ஏற்பட்டமையை தொடர்ந்து கட்டுப்பாடுகள் உடனடியாக இறுக்கப்பட்டன.

கடுமையான பயண விதிகள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு ஆகியவை வெளியிலிருந்து வரும் தொற்றுக்களை உடனடியாக நிறுத்துகின்றன. உள்ளே வருபவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தலின் கீழ் வைக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் அமல் செய்யப்பட்ட இரண்டு மாத சர்க்யூட்-பிரேக்கர் தவிர, நாங்கள் ஒருபோதும் மீண்டும் பொது முடக்கத்தின் கீழ் இருக்கவில்லை.

வாழ்க்கை ஏறக்குறைய இயல்பாக உள்ளது. எப்போது வேண்டுமானாலும் எனது குடும்பத்தினரை நான் சந்திக்க முடியும். கூடவே, உணவகத்தில் நண்பர்களைச் சந்திக்க முடியும். ஆனால், எட்டு பேருக்கு மேல் இருக்க முடியாது. எல்லா இடங்களிலும், வெளியில் கூட முகக்கவசம் அணிவது காட்டாயமாகும். ஆனால், நீங்கள் உடற்பயிற்சி செய்யும் போது அல்லது சாப்பிடும்போது அவற்றை கழற்றலாம்.

சமூக இடைவெளி பராமரிக்கப்படும் அலுவலகத்தில் எங்களில் பலர் மீண்டும் வேலைக்கு வந்துள்ளோம், உங்கள் முககவசத்தை அணிந்து , தொடர்புகளை கண்டுபிடிக்கும் செயலியில் ‘செக் இன்’ செய்துகொண்டபிறகு, நீங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்த்து மகிழலாம் அல்லது ஒரு கச்சேரியை கேட்டு ரசிக்கலாம்.

பள்ளிகளும், குழந்தை பராமரிப்பு மையங்களும் திறந்திருக்கின்றன. வார இறுதியில் நான் என் குழந்தைகளை எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்ல முடியும். பல இடங்கள் சமூக தூரத்தை உறுதி செய்வதற்காக வருவோர் எண்ணிக்கையை குறைத்திருந்தாலும், வார இறுதிக்குத் திட்டமிடுவது என்பது ஒரு இராணுவப் பயிற்சிக்கு தயார் செய்வது போன்றது.

ஆண்டின் தொடக்கத்திலிருந்து எங்கள் மக்கள் தொகையில் சுமார் 15 வீதம் பேருக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இங்கு சுமார் 60 இலட்சம் பேர் மட்டுமே உள்ளனர். நன்கு செயல்படும் தன்மை, அரசின் மீது அதிக நம்பிக்கை மற்றும் தடுப்பூசி தயக்கம் குறைந்து வருவது போன்றவையே இதற்கான காரணங்களாகும்.

எனவே, நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம், சிறப்பாக செயல்படுகிறோம். கட்டாய முககவசம் அணிதல், தொடர்புகளை கண்டறியும் சிறப்பான வழிமுறை, பயணம் மற்றும் பெரிய கூட்டங்களுக்கு நீடித்த கட்டுப்பாடுகள் அனைத்தும் இவற்றில் உதவியுள்ளன. அதேபோல் , எளிதில் கட்டுப்படுத்தக்கூடிய எல்லைகள், பெரிய நிதி வளம் மற்றும் கண்டிப்புடன் கூடிய திறமையான அமைப்புமுறை போன்றவையும் தங்கள் பங்களிப்பை அளித்துள்ளன.

ஆனால் அதே நேரத்தில், நாம் இப்போது வாழ சிறந்த இடம் இதுதான் என்ற எண்ணத்தில் ஆழ்ந்த முரண்பாடு உள்ளது.

சிங்கப்பூரில் பலர், வெளியே சென்று வரும் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால், நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நிலைமை இப்படி இல்லை. அவர்கள் பெரும்பாலும் தங்கள் பணியிடங்கள் மற்றும் தங்குமிடங்களில் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். சிறிய தங்குமிடங்கள் மற்றும் சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமைகள் காரணமாக கடந்த ஆண்டு இவர்களிடையே நிறைய கொரோனா தொற்றுக்கள் ஏற்பட்டன.

அவர்கள் தங்குமிடங்களை விட்டு வெளியே செல்ல விரும்பினால் தங்கள் முதலாளிகளிடம் அனுமதி பெற வேண்டும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொழுது போக்கு மையங்களில் மட்டுமே பெரும்பாலும் அவர்கள் கலந்துபழக முடியும்.

> “ சிங்கப்பூரின் திறமையான தடுப்பூசி திட்டத்தை ஒப்பிடும்போது மெத்தனமான வேகத்தில் செயல்படுத்தப்படும் நியூசிலாந்தின் தடுப்பூசித்திட்டமே, அந்த நாடு இரண்டாம் இடத்திற்கு தள்ளப்படுவதற்கு முக்கிய காரணம் என்று ப்ளூம்பெர்க் தெரிவித்தது. ”

இந்த சமூகத்தில் “உண்மையான மற்றும் குறிப்பிடத்தக்க” தொற்றுப்பரவல் ஏற்படும் ஆபத்து இருப்பதால் நாட்டின் பிற பகுதிகளைப் பாதுகாக்க இந்தக்கட்டுப்பாடுகள் அனைத்தும் அவசியம் என்று அரசு வாதிட்டது. இது பொய்யானது அல்ல. தொழிலாளர்களின் தங்குமிடத்தை மேம்படுத்துவதற்கான பல முயற்சிகளுக்குப் பிறகும்கூட, பெரும்பாலான சிங்கப்பூர்வாசிகளை விட அதிக நெரிசலான வீடுகளில் இவர்கள் தொடர்ந்து வாழ்கின்றனர்.

“புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லாததால், நமது கொள்கை தோல்விகளின் சுமைகளை அவர்கள் தாங்குவது என்பது சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்றாக எப்படியோ ஆகிவிடுகிறது” என்கிறார் அவர்.




“நியூசிலாந்து , கோவிட் மீட்சிப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருந்தாலும்கூட அது மக்களின் உரிமைகளை மிதிக்கவில்லை. இது முடிவைப் பற்றியது மட்டுமல்ல, நாம் அங்கு எப்படி சென்றடைகிறோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.”

வறிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீது தொற்றுநோயானது தொடர்ந்து தன் வடுக்களை விட்டுச்செல்கிறது. பொருளாதாரத்தை முடுக்கி விடவும், ஏழைக் குடும்பங்களுக்கு உதவவும் அரசு மில்லியன் கணக்கான டொலர்களை செலவுசெய்து வருகிறது. வேலையின்மை விகிதம் குறைவாகவே உள்ளது. ஆனால், புள்ளிவிவரங்கள் முழு கதையையும் சொல்லவில்லை. சில தொழிலாளர்கள் சம்பள வெட்டுக்களை அனுபவித்துவருகின்றனர்.

“இது ஆபத்தானது. அந்த நாளில் நீங்கள் எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்று தெரியாத உணர்வு,பெரிய மன அழுத்தத்தை ஏற்படுத்தும். அவர்களின் இடத்தில் மற்றொருவரை மணியமர்த்துவது மிகவும் எளிது. எனவே இது சமூக பாதுகாப்பின்மையை ஏற்படுத்தியியுள்ளது,” என்று சமூக சேவகர் பாட்ரிசியா வீ கூறுகிறார்.

இந்த மன அழுத்தம் பின்னர் அவர்களின் குடும்பங்களையும் மோசமாக பாதிக்கும். உதாரணமாக, குடும்ப வன்முறை சம்பவங்கள் பொதுமுடக்கத்திற்குப் பின்னரும் அதிகரித்து வருகின்றன என்று அவர் மேலும் கூறுகிறார். சுதந்திரத்தின் சலுகைகளையும் நிலையான வருமானத்தையும் அனுபவிக்கும் நம்மில் பலருக்கும்கூட, சில பிரச்சனைகள் இருக்கின்றன.

மிகவும் கண்காணிக்கப்படும் இந்த நாட்டில் தொற்றுநோய்க்கு முன்னர் எங்களுக்கு இருந்த சிறிதளவு தனியுரிமை, இப்போது மேலும் குறைந்துவிட்டது. செல்லும் எல்லா இடங்களிலும் ஒரு செயலியை நாங்கள் பயன்படுத்த வேண்டும் அல்லது நாங்கள் இருக்கும் இடத்தையும், நாங்கள் தொடர்பு கொள்ளும் நபர்களையும் கண்டுபிடிக்கும் ஒரு டோக்கனை எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் தரவுகள் பகிரங்கமாக வெளியிடப்படாது என்று அரசு கூறுகிறது.

சிங்கப்பூர் மற்றும் பிற இடங்களில் கடுமையான தனிமைப்படுத்தல் விதிகள் காரணமாக பயணம் எளிமையானதாக இல்லை என்பதால் பலரும், தங்கக் கூண்டில் அடைபட்ட கிளியாக மாறியுள்ளனர். மற்ற நாடுகளில் உள்ள நம் அன்புக்குரியவர்களை நம்மில் பலர் இப்போதும் நேரில் பார்க்க முடியாது என்பதே இதன் பொருள்.

அருகிலுள்ள இந்தோனேசிய தீவுக்கு அல்லது அண்டை நாடான மலேசியாவின் எல்லை நகரங்களுக்கு வார இறுதி பயணமாக என்று வெளிநாடுகளுக்குப் பயணம் செல்வதற்கு சிங்கப்பூரில் பலர் பழகியுள்ளனர்.

இது இனி சாத்தியமில்லை. எனவே, பல்லாயிரக் கணக்கானவர்கள் எங்கும் செல்லாமல் வெறுமனே படகுப்பயணத்தை மேற்கொள்கின்றனர். ஹோட்டல்கள் “தங்குமிடங்களாக” முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. மலேசியாவின் தடங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளில் வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஆர்வலர்கள், இப்போது இந்தத்தீவுக்குள்ளேயே சுற்றி வருகின்றனர்.

ஆனால், இந்தக்குமிழி எப்போது வேண்டுமானாலும் உடையக்கூடும். பொருளாதார மீட்சிக்காக நாடு மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று சிங்கப்பூர் அரசு பலமுறை வலியுறுத்தியுள்ளதுடன், சீனா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற சில இடங்களிலிருந்து பயணிகளுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தவும் தொடங்கியுள்ளது.

**- பிபிசி நியூஸ், சிங்கப்பூர்**

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 2
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - எஸ்.மயூரன்

* 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

01.



1. 2. 3.


02.



1. 2. 3.

* 3, 4 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள விலங்குகளும் உபகரணங்களும் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?


03.



A B C D

1. D, A உம் B, C உம் 2. A, B உம் C, D உம் 3. B, D உம் A,C உம்

04.



A B C D

1. BC உம் AD உம் 2. AC உம் BD உம் 3. CD உம் AB உம்

* 5, 6 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

5. அரிசி, குரக்கன் என்பன உணவு போன்று தேயிலை, கோப்பி என்பன.........................

1. குடிபானம் 2. தேநீர் 3. ஏற்றுமதி

6. வைத்தியர் நோயாளிகளுக்கு மருந்து வழங்கினார். ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார் இதில் வைத்தியருக்கு ஆசிரியர் எனின் மருந்துக்கு

1. சொல்லி 2. பாடம் 3. மாணவர்களுக்கு

* சொற்கள் உள்ள கட்டங்களை அவதானித்து 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

குரங்கு | குடம்பி | பிரம்பு | | கைப்பிடி

7. வெற்றுக்கட்டத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

1. புதியவகை 2. புடைவை 3. புன்னகை

8. பிரம்பு என்பதற்குப் பதிலாக இடத்தக்க கட்டத்தைத் தெரிவு செய்க.

1. பிணைப்பு 2. பின்பு 3. வரம்பு

* பின்வரும் கவிதையை வாசித்து 9, 10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!

9. " உடல் சுத்தத்தைப் பேணுதல் வேண்டும்" என்பதை நன்கு வெளிப்படுத்தும் வரி யாது?

1. இரவில் நன்றாய் உறங்கப்பா! 2. குளித்த பிறகு குடியப்பா! 3. கூழையே நீ குடித்தாலும்

10. இக் கவிதை மூலம் வலியுறுத்தப்படும் முழுமையான செய்தி எதுவாக உள்ளது?

1. ஏழைகள் உறங்குதல் 2. தினமும் குளித்தல் 3. உடல் நலம் பேணுதல்

11. " குன்றிலிட்ட தீபம் போல" என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?

1. வெளிப்படையாகத் தெரிதல் 2. பிரகாசமாக எரிதல் 3. மறைந்து தோன்றுதல்

12. அவ்வழியால் செல்பவர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் கொள்ளையர்களை ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து மடக்கிப் பிடித்தனர். இதற்குப் பொருத்தமான பழமொழி யாது?

1. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
3. ஆழமறியாமல் காலை விடாதே.

13. பின்வருவனவற்றில் தனிப்பட்ட கூற்றாக அமைவது,

1. வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன.
2. பூமி கோள வடிவமாகும்
3. றோசா அழகான பூ ஆகும்.


14. 8 7 8 5 - S M S L
4 3 6 3 - U N K N எனின்
7 4 1 3 - ............................ இடைவெளிக்கு இடப்படவேண்டிய குறியீட்டு எழுத்துக்கள்

1. MUKN 2. MUON 3. MULN

15. எனது தம்பியின் தந்தைக்கு இரண்டு பிள்ளைகளும் பாத்திமா என்ற சகோதரியும் உள்ளனர். எனின் நான் பாத்திமாவுடன் உரையாடும் போது எவ்வாறு உறவு முறை கூறி உரையாடுவேன்?

1. அத்தை 2. அம்மா 3. அக்கா

* பொருட்களின் விலைகளை அவதானித்து விடை அளியுங்கள்



ரூபாய் 55.00 ரூபாய் 70.00 ரூபாய் 50.00

16. ஒரு புத்தகத்தின் விலை யாது?

1. ரூபாய் 15.00 2. ரூபாய் 10.00 3. ரூபாய் 20.00

17. ஒரு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பிறந்த தினங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

டிசாந் 2009.04.18 அமிஷா 2007.12.20 டிக்சன் 2009.09.17

இதற்கேற்ப சரியான கூற்று

1. டிஷாந் அமிஷாவிலும் இளையவன்
2. டிசாந் அமிஷாவிலும் மூத்தவன்
3. இவர்கள் எல்லோரிலும் டிக்சன் மூத்தவன் ஆவான்

# கொரோனாவை முற்றாக ஒழிப்பதற்கு ஆளும் - எதிர்தரப்பு இணையவேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை

கொழும்பு, மே 07

**கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை வெற்றிக் கொள்ள ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய நெருக்கடியான நிலைக்கு தீர்வு காண முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

ராஜகிரியவில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்திய நாட்டில் கொவிட் தாக்கத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கைக்கும் ஏற்படும் வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றிக் கொள்ள ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும். ஆனால் இரு தரப்பினரும் பொறுப்புடன் செயலுப்படாமல் ஒரு தரப்பினர் பிறிதொரு தரப்பினரை தூற்றிக் கொள்கிறார்கள்.

அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கோவிட்-19 தாக்கத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள சவால்களையும் வெற்றி கொள்ள முடியாது. சுகாதார காரணிகளை முன்னிலைப்படுத்தி செயலுப்படுதல் அவசியமாகும்.

சுகாதார தரப்பின் செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகள் இடையூறு விளைவிப்பதாக அறிய முடிகிறது. இவ்வாறானவர்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை குறித்து அவதானம் செலுத்தாது பாராளுமன்றில் தேவையற்ற வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுவது கவலைக்குரியது. ஆளும் தரப்பினரும், எதிர்தரப்பினரும் பொறுப்புடன் செயல்படுவது அவசியமாகும் - என்றார்.

(அ)



# கொரோனா நிலைமை குறித்து சஜித்-ஐ.நா. பிரதிநிதி ஆராய்வு

கொழும்பு, மே. 07

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்து வருவதும் அதனூடாக நாடு எதிர்கொண்டுள்ள சவால்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் ஐ.நா. ஒத்துழைக்கவேண்டும் என்றும் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

தாம் இலங்கைக்கு அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் கட்சி பேதம் இன்றி அரசுக்குத் தாம் ஒத்துழைப்பதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி கொரோனா விடயத்தில் அரசியல் செய்யாது என்றும் சஜித் பிரேமதாஸ இதன்போது சுட்டிக்காட்டினார்.

# மேல் மாகாணத்தில் கடைகளில் பணியாற்றுவோருக்கு அன்ரிஜென்

கொழும்பு, மே. 07

மேல் மாகாணத்தில் வீதியோரங்களில் காணப்படும் சிறு கடைகளில் பணியாற்றி வருவோருக்கு எழுமாறான அடிப்படையில் அன்ரிஜென் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மேல் மாகாணத்தில் பஸ் நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களுக்கு அருகாமையில் நடைபாதை வியாரபாரம் மற்றும் சிறு கடைகளில் வியாபாரம் செய்வோருக்கு இவ்வாறு பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவ்வாறான 275 பேர் கண்காணிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் 72 பேருக்கு அன்ரிஜென் சோதனை நடத்தப்பட்டதாகவும் அதில் கோவிட் தொற்றுக்கு இலக்கான எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வைபவங்களை உடன் தடை செய்யுமாறு பொலிஸ் நிலையங்களுக்கு சுற்றறிக்கை

கொழும்பு, மே. 07

இலங்கையில் கோவிட் தொற்றின் மூன்றாவது அனர்த்த நிலையை கவனத்தில் கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கடந்த முதலாம் திகதி வெளியிட்ட புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக பொலிஸ் தலைமையகம், நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் இரண்டு விசேட சுற்றறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளது.

அதன்படி புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக, வைபவங்கள் நடத்துவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதுடன், இந்த தடை உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தலைமையகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒரு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் புதிய சுகாதார வழிகாட்டல்களின் மூலம் பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் வாடகை வாகனங்கள் தொடர்பாகவும் போக்குவரத்துக்கு விதிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்கள் தொடர்பா கவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அத்துடன் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக கடந்த 24 மணித்தியாலத்தினுள் 238 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் முகக்கவசங்களை முறையாக அணியாதவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# 1,200 படுக்கைகளுடன் இலங்கையில் பெரும் கொரோனா சிகிச்சை மையம்

கொழும்பு, மே. 07

இலங்கை இராணுவத்தால் சீதுவ பகுதியில் அமைக்கப்பட்டுவரும் 1,200 படுக்கைகளைக் கொண்ட மிகப்பெரிய கோவிட்-19 சிகிச்சை மையத்தின் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடையும் நிலையில் உள்ளன.

அடுத்த 24 மணி நேரங்களில் இந்த சிகிச்சை மையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும். தொடர்ந்து கொரோனா தொற்று நோயாளிகள் இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



தீவிர சிகிச்சை பிரிவு வசதி, தனிமைப்படுத்தல் வசதிகளை உள்ளடக்கிய இலங்கையில் மிகப் பெரிய கொரோனா சிகிச்சை மையமாக இது அமையவுள்ளது.

இலங்கையில் பல்வேறு பகுதிகளில் 10 ஆயிரம் படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும் என அண்மையில் இடம்பெற்ற கொவிட் கட்டுப்பாட்டு செயலணிக் கூட்டத்தில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

1,200 படுக்கைகள் கொண்ட சிகிச்சை மையத்தை அமைக்கும் பணியில் இராணுவத்தின் சேவா வனிதா பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தைமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க தூதுவர் - பிரதமர் கொழும்பில் நேற்று சந்திப்பு



கொழும்பு, மே. 07

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்அலைனா ரெப்லிட்ஸ் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது தடுப்பூசிகளுக்கான அவசரத் தேவை , கொவிட் 19 தொற்று நோய் சவால்களைச் சந்திப்பதில் ஒத்துழைப்பு, அமெரிக்க முதலீட்டாளர்களை நாட்டுக்குள் ஈர்ப்பது என்பன உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்துப் பேசியதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(அ)

# ரஞ்சன் கையொப்பமிட்ட ஆவணம் சஜித்திடம்!

கொழும்பு, மே. 07

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட்டுள்ள பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் அவரின் சட்டத்தரணி ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆவணங்களைப் பெற்றுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்துள்ளார் எனவும், அந்த ஆவணங்கள் விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# தொற்றால் திணறும் இந்தியாவை 3ஆவது அலை விரைவில் தாக்கும்!

## அரசாங்கத்தின் மூத்த விஞ்ஞானி எச்சரிக்கை
## தயார்படுத்துமாறு உயர்நீதிமன்று அறிவுறுத்து

புதுடில்லி, மே 07

இந்தியாவில் நாளாந்த தொற்று பாதிப்பு 4 இலட்சத்தை கடந்துள்ளது. 4 ஆயிரம் பேர் தொற்றால் மரணமாகின்றனர். இந்த நிலையில் மூன்றாவது அலையில் நாடு சிக்குவதை தவிர்க்க முடியாது என்று இந்திய அரசாங்கத்தின் விஞ்ஞான ஆலோசகர் கே. விஜயராகவன் எச்சரித்துள்ளார்.

தொற்று நோயின் இரண்டாவது அலையில் நோயாளர்களை சமாளிக்க முடியாது இந்தியா திணறுகிறது. பல நோயாளிகள் கவனிக்க முடியாமல் கைவிடப்படுகின்றனர். ஒட்சிசன் மற்றும் அவசர மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

இவ்வாறான தீவிர நெருக்கடியின் மத்தியில் கடந்த வாரத்தில் உலகெங்கும் பதிவான ஒட்டுமொத்த தொற்றாளர்களில் 50 வீதமானோர் இந்தியாவில் பதிவாகின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உலகில் கடந்த வாரம் பதிவான ஒட்டுமொத்த கொரோனா மரணங்களில் 25 வீதம் இந்தியாவில் பதிவானதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் தலைநகர் டில்லி உட்பட பல பகுதிகளில் மருத்துவமனைகள் முற்றாக நிரம்பியுள்ளன. நோயாளர்கள் மருத்துவமனைகள் முன்பாகவும் வாகனங்களிலும் நீண்ட வரிசையில் ஒட்சிசன் உள்ளிட்ட மருத்துவ உதவிகளுக்காக காத்துக்கிடக்கின்றனர். எனினும், அவை கிடைக்காமல் வீதிகளிலும் வாகனங்களிலும் பரிதாபமாக பலர் உயிரிழக்கின்றனர்.

இறந்தவர்களின் இறுதி சடங்குகளை செய்வதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. உடல்களைத் தகனம் செய்ய சடலங்களுடன் உறவுகள் நாள் முழுவதும் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் அவலங்களும் இந்தியாவில் பதிவாகியுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே கோவிட்19 தொற்று நோயின் மூன்றாவது அலையை இந்தியா விரைவில் எதிர்கொள்ளும். அதற்கு நாடு தயாராக இருக்க வேண்டும் என அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் கே.விஜயராகவன் எச்சரித்துள்ளார்.

மிக அதிக அளவு கொரோனா வைரஸ் தற்போது மக்கள் மத்தியில் பரவி வருவதால் மூன்றாவது அலை தவிர்க்க முடியாதது என்று அவர் கூறியுள்ளார். எனினும், மூன்றாவது அலை எப்போது தாக்கும்? என்பது குறித்த கால வரையறையை அவர் அறிவிக்கவில்லை. புதிய அலைகளுக்கு நாங்கள் தயாராக வேண்டும் என எச்சரித்துள்ளார்.



இதேவேளை, தொற்று நோயைக் கட்டுப்படுத்த பிரதமர் மோடி அரசாங்கம் விரைவாக செயல்படவில்லை, வினைத்திறனுடன் இதனைக் கையாளவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது. இந்நிலையில், கொரோனா மூன்றாவது அலையை எதிர்கொள்ள தயார்படுத்தல்களை செய்யுமாறு இந்திய உயர்நீதிமன்றம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## இந்தியாவில் கொரோனா உச்சம்:
# தொற்று 412,262 மரணம் 4,000

புதுடில்லி, மே 07

இந்தியாவில் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் 4 இலட்சத்து 12 ஆயிரத்து 262 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன், 3980 பேர் உயிரிழந்தனர் என்று இந்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், இந்தியாவில் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 10 இலட்சத்து 77 ஆயிரத்து 410 ஆக உயர்ந்துள்ளது. இதேபோன்று தொற்றுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 30 ஆயிரத்து 168 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று ஒரே நாளில் 3 இலட்சத்து 29 ஆயிரத்து 113 பேர் குணமடைந்தனர். இதனால், குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 72 இலட்சத்து 80 ஆயிரத்து 844 ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் தற்போது 35 இலட்சத்து 66 ஆயிரத்து 398 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை, இந்தியா முழுவதும் இதுவரை 16 கோடியே 25 இலட்சத்து 13 ஆயிரத்து 339 பேருக்கு கோவிட்19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சோதனை ஓட்டத்தை 'ஸ்ரார்ஷிப்' வெற்றிகரமாக நிறைவு செய்தது!



ரெக்சாஸ், மே 07

ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் கனவுத் திட்டத்தின் அடிப்படையான ஸ்ரார்ஷிப் விண்கலத்தின் சோதனை ஓட்டம் முதன்முறையாக வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.

முன்னதாக அதன் 4 விண்கலங்கள் சோதனையில் தோல்வியடைந்து வெடித்துச் சிதறின. ஆனால், எஸ். என் 15 என்று பெயரிடப்பட்ட இந்த விண்கலம் எந்த சிக்கலுமின்றி சோதனை ஓட்டத்தை முடித்து வெற்றிகரமாக தரையிறங்கியது.

ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் இந்த தசாப்தத்தின் இறுதியில் சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் மனிதர்கள் மற்றும் 100 தொன் எடை கொண்ட பொருட்களை கொண்டு செல்லும் விண்கலத்தை உருவாக்கும் திட்டத்தில் தீவிர முனைப்பில் உள்ளது.

இந்நிலையில், இந்த திட்டத்தின் அடிப்படையான ஸ்ரார்ஷிப் விண்கல சோதனை ஓட்டம் நேற்று நடைபெற்றது.

ரெக்சாஸ் மாகாணத்தில் இருந்து ஏவப்பட்ட விண்ணில் செலுத்தப்பட்ட விண்கலம் 10 கிமீ தூரம் சென்று பின்னர் தரையில் வந்து செங்குத்தாக தரையிறங்கியது. இந்த விண்கலத்திலும் ஆரம்பத்தில் சிறு தீ ஏற்பட்டாலும் அது உடனடியாகவே அணைக்கப்பட்டது. (ஐ)

# நெருக்கடியில் இஸ்ரேல்!

ஜெருசலேம், மே 07

இஸ்ரேலில் ஆட்சியமைக்க பெரும்பான்மையை நிரூபிக்க பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு வழங்கப்பட்ட 28 நாள் காலக்கெடு முன்தினத்துடன் முடிவடைந்தது.

இதையடுத்து இரண்டாவதாக அதிக ஆசனங்களை வென்ற யேஷ் அதித் கட்சியின் தலைவர் யெய்ர் லாப்பிட்டுக்கு புதிய அரசாங்கம் அமைக்க வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. அவர்களும் பெரும்பான்மையை நிரூபிக்காவிட்டால் இஸ்ரேல் மற்றொரு தேர்தலை விரைவில் எதிர்கொள்ளும் நிலை ஏற்படும்.

இஸ்ரேலில் 2019ஆம் ஆண்டிலிருந்து 3 முறை நடந்த தேர்தல்களில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், கடந்த மார்ச் மாதம் 4ஆவது முறையாக பொதுத்தேர்தல் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# திருமண பந்தத்தில் இணைகிறார் நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா

வெலிங்டன், மே 07

அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் தனது நீண்டகால நண்பரும் காதலருமான கிளார்க் கே போர்ட்டுடன் திருமண பந்தத்தில் இணையவுள்ளார் என்று நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களுக்கு நிச்சயதார்த்தம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து அவர் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜெசிந்தாவுக்கும் கே போர்ட்டுக்கும் 2018ஆம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது.

உலகில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு அடுத்தபடியாக பதவியிலிருக்கும்போதே குழந்தை பெற்ற இரண்டாவது பெண் தலைவர் ஜெசிந்தா ஆர்டன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தடுப்பூசி காப்புரிமையை விட்டுக் கொடுப்போம் - அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், மே 07

கொரோனா தடுப்பூசிகளுக்கான காப்புரிமையை விட்டுக் கொடுப்பதை ஆதரிக்கிறோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பல நாடுகளில் தீவிரம் அடைந்துள்ளது. தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் மரணமாகின்றனர். இந்த நிலையில் தடுப்பூசியைக் கொள்முதல் செய்வதில் உலக நாடுகளிடையே பெரும் வேறுபாடு நிலவுகிறது.

இதனால், கொரோனா தடுப்பூசி காப்புரிமையை குறிப்பிட்ட காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டும் என்று அறிவியல் விஞ்ஞானிகள், உலகத் தலைவர்கள் பலரும் வலியுறுத்தினர். இதற்கான போராட்டங்களும் பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா தடுப்பூசிகளுக்கு காப்புரிமை கூடாது என்று இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் உலக சுகாதார அமைப்பிடம் வலியுறுத்தின. ஆனால், இவ்விவகாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் மௌனம் காத்து வந்தன. மருந்து நிறுவனங்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில் கொரோனா தடுப்பூசிகளுக்கான காப்புரிமையை விட்டுக் கொடுப்பதை ஆதரிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. (ஐ)






### ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்:

## முதன்முறையாக இறுதியாட்டத்திற்கு முன்னேறியது மன்செஸ்டர் சிற்றி!

மன்செஸ்டர், மே 07

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்துக்கு மன்செஸ்டர் சிற்றி அணி முதன்முறையாக தகுதி பெற்றுள்ளது.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடர் பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது.

விறுவிறுப்பான இந்த போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது. 32 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் மன்செஸ்டர் சிற்றி (இங்கிலாந்து), பாரிஸ் சென் ஜெர்மைன் (பிரான்ஸ்), ரியல் மட்ரிட் (ஸ்பெயின்), செல்சியா (இங்கிலாந்து) ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரைஇறுதிப்போட்டி 2 ஆட்டங்கள் கொண்டதாகும்.

இதில் மான்செஸ்டரில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்த இரண்டாவது அரையிறுதியில் மன்செஸ்டர் சிற்றி-பாரிஸ் சென். ஜெர்மைன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் பந்து அதிக நேரம் (56 சதவீதம்) பாரிஸ் சென். ஜெர்மைன் அணியின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், மன்செஸ்டர் சிற்றி அணியினர் எதிரணியின் கோல் எல்லையை அடிக்கடி முற்றுகையிட்டு கோல் அடிக்க தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தை தொடுத்தனர்.

இதனால், 11ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றியின் ரியாத் மாக்ரெஸ் அணிக்காக முதல் கோலை அடித்தார். இதனால் மன்செஸ்டர் சிற்றி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் மன்செஸ்டர் சிற்றி அணி தொடர்ந்து பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. 63ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி மீண்டும் கோல் அடித்தது. முதல் கோலை அடித்த ரியாத் மாக்ரெஸ் இந்த கோலையும் அடித்து அசத்தினார்.

69ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றியின் பெர்னான்டின் ஹோவை வேண்டுமென்றே காலில் மிதித்த பாரிஸ் சென். ஜெர்மைன் அணியின் வீரர் ஏஞ்சல் டி மரியா நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு அந்த அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டியதானது.

கடுமையாக பாரிஸ் சென். ஜெர்மைன் அணி போராடியேபோதும்அந்த அணிக்கு கோல் போடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால், இறுதியில் மன்செஸ்டர் சிற்றி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனால் ஒட்டு மொத்தத்தில் மன்செஸ்டர் சிட்டி அணி 4-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று முதல்முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியது

# பங்களாதேஷ் செல்கிறது இலங்கை கிரிக்கெட் அணி

கொழும்பு, மே 07

மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இலங்கை அணி பங்களாதேஷ் செல்லவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடருக்காக 16ஆம் திகதி இலங்கை அணி பங்களாதேஷ் செல்கிறது. அங்கு குறுகியகால தனிமைப்படுத்தலின் பின்னர் 21ஆம் திகதி பயிற்சி போட்டிகளில் பங்கெடுக்கும்.

இதன் பின்னர் மே 23, 25 மற்றும் 28 ஆகிய திகதிகளில் மீர்பூரில் உள்ள ஷெர்-இ-பங்களா தேஷ் தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை பங்களாதேஸுடன் பலப்பரீட்சை நடத்தும்.




கோவிட் 19 தொற்றுக்கு மத்தியில் பங்களாதேஷுக்கு செல்லும் இரண்டாவது அணியாக இலங்கை உள்ளது. முன்னதாக மேற்கிந்தியத் தீவுகள் பங்களாதேஷுக்கு சென்று தொடரில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ்: அரையிறுதியில் ஆஷ்லே!

மட்ரிட், மே 07

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி அரையிறுதிக்கு முன்னேறினார்.

ரென்னிஸில் பிரபல தொடர்களில் ஒன்றான மட்ரிட் ஓப்பன் ஸ்பெயன் நாட்டின் தலைநகரான மட்ரிட்டில் நடக்கிறது.

இதில் ஆஷ்லே, காலிறுதிப் போட்டியில் செக் குடியரசின் பெட்ரா குவித்தோவாவை எதிர் கொண்டார். இதில், 6-1 3-6, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்ற ஆஷ்லே அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதியில் அவர் ஸ்பெயின் வீராங்கனை பௌலா பதோசாவை சந்திக்கவுள்ளார். (ஐ)

## ஐ.பி.எல்லில் ஆடிய நியூஸி. வீரர்கள் இங்கிலாந்துக்கு செல்கின்றனர்!

புதுடில்லி, மே 07

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்ற நியூசிலாந்து வீரர்கள் இந்தியாவிலிருந்து நேராக இங்கிலாந்து செல்கிறார்கள்.

கொரோனா பாதுகாப்பு வலயத்தில் இருந்தும் சில வீரர்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. இதனால் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. இதில் பங்கேற்ற 11 இங்கிலாந்து வீரர்களில் 8 பேர் தங்கள் சொந்த ஊருக்கு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிராக இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது நியூசிலாந்து அணி. இதனால், ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்ற கேன் வில்லியம்சன், கைல் ஜேமிசன், சான்ட்னர் ஆகிய நியூசிலாந்து டெஸ்ட் அணி வீரர்களும் பிசியோதெரபிஸ்ட் டாமி சிம்செக்கும் இந்தியாவிலிருந்து மே 11 அன்று இங்கிலாந்து செல்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு நியூசிலாந்து வீரரான டிரெண்ட் போல்ட், தனி விமானத்தில் வெள்ளியன்று டில்லியிலிருந்து நியூசிலாந்து செல்கிறார். சில வாரங்கள் அங்கிருந்துவிட்டு ஜூன் ஆரம்பத்தில் இங்கிலாந்து செல்வார். (ஐ)




# ஐ.பி.எல். தொடர் இடைநிறுத்தம்! ரூ. 5,000 கோடி இலாபம் இழப்பு!!




புதுடில்லி, மே 07

ஐ.பி.எல். போட்டி இடைநிறுத்தப்பட்டதால் 2 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் - சுமார் 5 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் இலாப இழப்பு ஏற்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று பாதிப்பால் கடந்த ஆண்டு ஐ.பி.எல். தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தப்பட்டது. இந்த ஆண்டு இந்தியாவிலேயே தொடர் நடத்தப்பட்டது. பெரும் பாதுகாப்புடன் நடந்த இந்தத் தொடரிலும் வீரர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

இதனால், 29 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் இடைநிறுத்தப்பட்டது. இவ்வாறு போட்டி நிறுத்தப்பட்டமையால், 2 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று பி.சி.சி.ஐயின் பொருளாளர் அருண் துமால் கூறியுள்ளார்.

எனினும், சரியான இழப்புகளை ஒப்பந்த விவரங்களை சரியாகக் கொண்டே கணிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும், கடந்த வருடத்திலும் பார்க்க இந்த ஆண்டு செலவை 35 வீதம் குறைத்துள்ளோம். எனினும் கொரோனா இடரிலும் 4 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது. தொலைக்காட்சி பார்வையாளர்களின் எண்ணிக்கை 25 வீதத்தால் உயர்ந்துள்ளது என்றும் அவர் சொன்னார். (ஐ)

# ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குக!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,மே07

**நாளாந்தம் கோவிட்-19 தொற்றுறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையினால், ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைக் குறிப்பிட்டார்.

அரச மற்றும் தனியார் துறைகளில், மாநாடுகள், சேவையாளர்களின் சந்திப்பு என்பன இடம் பெறுவது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் கூறினார்.

அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



## மஹிந்தவின் இப்தார் நிகழ்வில் பங்கேற்ற ஹக்கீம், ரிஷாத் கட்சிகளின் எம்.பிக்கள்!

கொழும்பு, மே 07

முஸ்லிம் மக்கள் சார்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ‘இப்தார்’ நோன்பு திறக்கும் நிகழ்வு இம்முறை கொரோனா கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் மக்களின் பங்கேற்புடன் நடைபெறும் இப்தார் நிகழ்வு இம்முறை கொரோனா தொற்று காரணமாக, இவ்வாறு சுருக்கமாக நடைபெற்றது எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் கட்சிகள் சிலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், இதன்போது முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த பிரச்னைகள் தொடர்பில்தாம் விசேட கவனம் செலுத்துவாரென பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான நஸீர் அஹமட், எச்.எம்.எம்.ஹரீஸ், எஸ்.எம்.எம்.முஷாரப், அலி சப்ரி ரஹீம், எம்.எஸ்.தௌபீக், இஷாக் ரஹ்மான், பைசல் காசிம் மற்றும் பிரதமரின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பர்சான் மன்சூர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரூபாய் 63 லட்சம் பெறுமதியான ஹெரோயின் பறிமுதல்

கொழும்பு, மே 07

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் 630 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகையின் சந்தை பெறுமதி 63 இலட்சம் ரூபாய் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வைத்தியசாலைகளில் இடப் பற்றாக்குறை!

கொழும்பு, மே. 07

இலங்கையின் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக் குறை ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எச்சரித்துள்ளார். நாட்டின்கொரோனா நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைக்குறிப்பிட்டார்.

இலங்கையில்உள்ளவைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர் தொகை உச்சத்தை எட்டியுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரே தடவையில் அதிகமான நோயாளர்களை வைத்தியசாலைகளில் வைத்து, சிகிச்சையளிக்கும் வசதிகள் குறைந்து கொண்டு செல்கின்றன எனவும், அவசர சிகிச்சைப் பிரிவுகள் குறைவாக இருக்கின்றன எனவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தெரியவரும் வரை சுய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கேட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 16 ஆயிரத்து 720 பேர் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## கொடிகாமத்தில் கிருமித்தொற்று நீக்கும் செயல்பாடு முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே07

கொடிகாமத்தில் கிருமித் தொற்று நீக்கும் செயல்பாடு நேற்று இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கொடிகாமம் பகுதியில் கடந்த வாரத்தில் அதிகளவு கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து கொடிகாமம் நகர்ப்பகுதி, சந்தை கடைத்தொகுதி மற்றும் இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்று இராணுவத்தினரால் குறித்த பகுதிகள் நீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டு கிருமித் தொற்று நீக்கும் மருந்து விசிறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுதலில் இராணுவத்தின் 52 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியின் நெறிப்படுத்தலில் இந்த செயல்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காமினி லொக்குகேயின் மருமகனுக்கும் தொற்று

கொழும்பு, மே 07

அமைச்சர் காமினி லொக்குகேயின் மருமகன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துஷார பெரேரா கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாதம் 19 ஆம் திகதி முதல் பிலியந்தல பொலிஸ் பிரிவில் உள்ள பிலியந்தல மற்றும் கெஸ்பேவ மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் 400 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென கெஸ்பேவ சுகாதார அலுவலர் தெரிவித்தார்.

தல்தர கிழக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள கஹபொல பகுதியில் அதிக அளவில் பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலை காரணமாக பிலியந்தலவை தனிமைப்படுத்த சுகாதாரத்துறை எடுத்த நடவடிக்கைகளை, அமைச்சர் லொக்குகே தலையிட்டு தடுத்தாரென குற்றம்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா தனியார் வைத்தியசாலைகள்மீது சுகாதார பரிசோதகர்கள் அதிரடிச் சோதனை

வவுனியா, மே. 07

வவுனியாவில் தனியார் வைத்தியசாலைகள் மீது சுகாதார பரிசோதர்களால் விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கோவிட் 19 தாக்கம் வவுனியாவில் அதிகரித்து வரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் மூன்று பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, வவுனியாவில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் சுகாதாரப் பிரிவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கு உள்ள சுகாதார வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா, அங்கு கடமையாற்றுவோர் மற்றும் வந்து செல்வோர் முக கவசங்களை அணிந்துள்ளார்களா, சமூக இடைவெளி பேணப்படுகின்றனவா போன்ற விடயங்கள் குறித்து பார்வையிட்டதுடன், கோவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.





## ரிஷாத்தின்...

மும், சபாநாயகரும் எந்த சந்தர்ப்பத்தி லும் இடமளிக்க மாட்டார்கள். அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாப்பதற்கு சில முறைகள் உள்ளன.

நாடாளுமன்றத்திற்கு அழைத்துவந்து மீண்டும் அழைத்துச் செல்லல் மற்றும் விடுமுறையை அங்கீகரித்தல் என வழி கள் உள்ளன. எனது நினைவுப்படி, இது போன்ற சந்தர்ப்பத்தில் சந்திரசேகரன் உறுப்பினர், பயங்கரவாத தடைச்சட்டத் தில் கைதாகி 03 மாதங்கள் தடுப்பிலிருந் தார். எவ்வாறாயினும் சாதாரண விளக்க மறியல் அன்றி விசேட உத்தரவின் பேரில் இரகசிய பொலிஸாரினால் தடுத்து வைத் திருப்பதானது, அவர் கூறுகின்ற, வாக்கு மூல விடயங்கள் வெளியாகக்கூடாது என்பதற்காகும்.

ஆகவே பாராளுமன்றத்திற்கு அவரை ஒருநாளாவது அழைத்துவந்தால் அந்த விசாரணை இரகசியம் அம்பலமாகி விடும். பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்படும் நோக்கம், வாக்கு மூலம் மற்றும் விசாரணை முடியும்வரை வெளிப்படுத்தாமலிருப்பதாகும். சஹ் ரான் குழுவினருக்கு ரிஷாத் பதியூதீன் வாகன உதவி செய்திருப்பதற்கான சாட்சியங்கள் உள்ளன.

நானும் குற்றப் புலனாய்வுப் பிரி விடம் இதுகுறித்த தகவல்களை அளித் திருக்கின்றேன். தற்கொலைக் குண்டு தாரிகளுக்கு சட்டவிரோதமாக இரும்பு, செப்பு என வழங்கியிருக்கின்றார். அது மிகவும் சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்கா கவே அமைச்சுக்கு அந்த கோட்டா வழங் கப்பட்டது. எனினும் அதனை பெரிய வர்த்தகர்களுக்கு ரிஷாத் வழங்கினார். உறவினர்கள் தொடர்பின் ஊடாக குண்டுதாரிகளுடன் தொடர்பிருப்பது தெரியவந்திருக்கின்றது.

ரிஷாத்திற்கு மன்னாரில் மாத்திரம் 3000 ஏக்கர் நிலம் உள்ளது. அவர் பல் வேறுபட்ட நபர்களின் பெயர்களில் உள் ளன. வெள்ளவத்தை உட்பட பல பிரதே சங்களில் சொந்த வீடுகள் உள்ளன. பாரிய சொத்து அவர் கடந்த காலங்களில் பெற் றிருக்கின்றார்.

அரிசியை இறக்குமதி செய்து துறை முகத்தில் வைத்துக்கொண்டு அவை கெட்டுப்போனதன் பின்னர் அவற்றை 20, 30 ரூபாய்களில் பெற்று, சுத்திகரிப்பு செய்து மீண்டுமாக சதொசவுக்கு விற்று விட்டுவார். கேள்விப்பத்திரம் ஊடாக 500 மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றார். இன்று அமைச்சர் பந்துல குணவர்தன அவற்றை நிறுத்தி சீராக அந்தப்பணிகளை செய்கின்றார்.

ரிஷாத் குறித்து அவரது சொத்துக் கள், வருமானங்கள், என பல ஆவணங் களை சி.ஐ.டிக்கு வழங்கியிருக்கின்றேன். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்கு அவரது விசாரணைகளில் சமூகத்திற்கு வெளிவரா மலிருக்கவே நாடாளுமன்றத்திற்குள் பிர வேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காக பல வழிகள் உள்ளன."

## நாளாந்த...

இந்த நிலையில், அரச வைத்திய சாலைகளில் நோயாளர்களுக்கான கட்டில்கள் தட்டுப்பாடு நிலவுவதைத் தவிர்ப்பதற்காக இராணுவத்தால் கொரோனா நோயாளர்களுக்கான தற்காலிக வைத்தியசாலை ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா - சீதுவ பிரதேசத்தில் இந்த தற்காலிக கொரோனா நோயாளர்களுக் கான வைத்தியசாலை அமைக்கப்பட்டுள் ளது.

இலங்கை இராணுவத்தினால் ஆரம் பிக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை யில், முதற்கட்டமாக 1200 நோயாளர் களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

இதற்கமைய 1200 நோயாளர் கட்டில் கள் தயார்படுத்தப்பட்டுள்ள நிலையில், கட்டில்களின் எண்ணிக்கையை விரை வில் 10 ஆயிரமாக அதிகரிக்க எதிர்பார்ப் பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் கொரோனா தொற் றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கட்டில்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டி ருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப்பிரிவு தெரிவிக்கின்றது.

இந்த நிலைமையானது எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கலாம் எனக் குறிப் பிட்ட தொற்று நோய் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளரான மருத்துவர் சுதத் சமர வீர, எதிர்வரும் நாட்களில் நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண் ணிக்கை 2ஆயிரத்தைக் கடக்கலாம் என் றும் அச்சம் வெளியிட்டார்.

அதன் காரணமாக மேலதிகமாக தொற்றாளர்களுக்காக சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகள் அவசியம் என்றும் அவர் கூறினார். (அ)

## யாழ்ப்பாணத்தில் மேலும்...

வர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத் துவ பீடம், யாழ்ப்பாண போதனா வைத் தியசாலை ஆகிய இரண்டு ஆய்வுகூடங் களில் 807 பேரின் மாதிரிகள் நேற்று பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 பேரும் கிளிநொச்சியில் 7 பேரும், முல்லைத்தீ வில் ஒருவரும் என 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப் பட்ட 6 பேருக்கு கொவிட்-19 நோய்த் தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள் ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதி காரி பிரிவில் நான்கு பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் தொற்றாளர்களு டன் முதல்நிலைத் தொடர்புடையவர் கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதி காரி பிரிவில் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் நால்வ ரில் இருவர் தொற்றாளர்களுடன் முதல் நிலைத் தொடர்புடையவர்கள். இரு வர் வீதி சீரமைப்புப் பணியில் ஈடுபடுவர் கள்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற 7 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரண்டு முதியவர்கள் கோவிட்-19 நோயால் உயிரிழந்துள்ள னர்.

அவர்களில் ஒருவர் யாழ்ப்பாண மாநகர் யாழ்.றோட் பகுதியைச் சேர்ந்த 77 வயதுடைய ஆண். மற்றையவர் இள வாலையைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்.

இதன்மூலம் கொவிட்-19 நோயினால் யாழ்ப்பாணத்தில் 21 பேரும் வடக்கு மாகாணத்தில் 27 பேரும் உயிரிழந்துள்ள னர் என்றும் வடமாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார். (அ)

## அபாய வலயமாக...

யாழ்.போதனா வைத்தியசலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கிளிநொச்சி மாவட் டத்தைச் சேர்ந்த 07 பேர் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

அவர்கள் அனைவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காகச் சென்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (அ)

# மன்னார் ஆலயம் மீது இடி, மின்னர் தாக்கம்

மன்னார், மே. 07

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள ஆக்காட்டிவெளி கிராம அலுவலகர் பிரிவில் உள்ள குமணாயன்குளம் புனித தோமையார் ஆலயத்தின் மீது நேற்று வியாழக்கிழமை மாலை இடி,மின்னல் தாக்கியது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் மழை பெய்த நிலையில் குமணாயன் குளம் புனித தோமையார் ஆலயத்தின் மீது இடி வீழ்ந்துள்ளது.

இதன்போது ஆலயத்தினுள் கட்ட டப் பணியில் ஈடுபட்டிருந்த மூவர்



தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

ஆலயத்தில் மேற்கூரை சேதமடைந் துள்ளது.

## கனடா தூதுவர் பதவி:
# நிராகரித்தார் சட்டமா அதிபர்



கொழும்பு, மே 07

கனடாவிற்கான இலங்கையின் உயர்ஸ் தானிகர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மறுத்துள்ளார்.

இலங்கையில் தங்கியிருந்து நாட்டுக்கு சேவையாற்ற வேண்டிய தேவை தமக் குள்ளதாக சட்டமா அதிபர் அறிவித்த தாக சட்டமா அதிபரின் இணைப்பதி காரி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் யோசனைக்கு சட்டமா அதிபர் நன்றி தெரிவித்துள்ளார். சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இந்த மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ளார்.

## 230 படுக்கையுடன்...

பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு தெரிவித்தது.

இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் நிர்வாக கட்டமைப்பின் கீழ் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது 200 படுக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவ மனையில், கிளிநொச்சி வைத்தியசாலை பிரிவினர் மேலதிகமாக 30 படுக்கைகள் இணைக்கப்படவுள்ளன என்று தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## கொரோனா சிகிச்சை...

நாட்டில் கொரோனா மூன்றாம் அலை யின் தாக்கமானது வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நாடு முழுவதும் 8,000 நோயாளர்கள் சிகிச்சை பெறும் வகையில் கொரோனா சிகிச்சை மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொரோனா செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வவுனியா பொருளா தார மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களைத் தங்க வைத்து சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கை கள் இடம்பெற்று வருகின்றன. 100 கட் டில்களைக் கொண்டதாக அமைக்கப் படவுள்ள குறித்த சிகிச்சை நிலையத் துக்கு தேவையான ஏற்பாடுகளை இரா ணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், நோயாளருக்கு தேவை யான மேலதிக மலசல கூடங்களை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பொருளாதார நிலையம் அமைக்கப்பட்டு இரண்டு வரு டங்கள் கடந்த நிலையிலும் இன்னும் பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப் படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்...

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் நேற்று காற்றுடன் கூடிய மழை பொழிந் துள்ளது.

குறிப்பாக வவுனியா அரபாத்நகர் பகுதியில் வீசிய கடுங்காற்று காரணமாக விவசாயி ஒருவரால் செய்கைபண்ணப் பட்டிருந்த ஒரு ஏக்கர் அளவிலான பப் பாசிச் செய்கை முற்றாக பாதிக்கப்பட் டுள்ளது.

இதனால் பல இலட்ச ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதா ரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயி கவலை தெரிவித்துள்ளார்.

## நாட்டில் நேற்று...

இவர்களில், 44 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் என தெரி விக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 424ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலி ருந்து குணமடைந்த 810 பேர் நேற்று வைத்தியசாலைகளில் இருந்து வெளியே றிய நிலையில், மொத்தமாக ஒரு இலட் சத்து 885பேர் தொற்றிலிருந்து மீண்டுள் ளனர்.

அத்துடன், கொரோனா தொற்றி னால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 734 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், 17 ஆயிரத்து 805 கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

ணிக்கை 21 ஆகவும் வடக்கு மாகாணத் தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆக வும் அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 77 வயது டைய முதியவர் ஒருவரும் இளவாலை யைச் சேர்ந்த 75 வயதுடைய மூதாட்டி ஒருவரும் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தனர்.

இதனால் யாழ்.மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண் ணிக்கை 21 என்றும் வடக்கு மாகாணத் தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 27 என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# நாட்டின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை அபாயம்!

## கொரோனா தடுப்பு இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, மே 07

**நாட்டின் மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என்று ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கோவிட் 19 தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எச்சரித்துள்ளார்.**

கொரோனா தொற்று பரவல் நிலைமை தொடர்பில் செய்தியாளர்களுக்கு நேற்று கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார். நாட்டின் மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்க முடியுமான நோயாளர் தொகை உச்சத்தை எட்டியுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒரே தடவையில் அதிகமான நோயாளர்களை மருத்துவமனைகளில் வைத்து, சிகிச்சையளிக்கும் வசதிகள் குறைந்து கொண்டு செல்கின்றன எனவும், அவசர சிகிச்சைப் பிரிவுகள் குறைவாக இருக்கின்றன எனவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தெரியவரும் வரை சுய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளான 16 ஆயிரத்து 720 பேர் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

மானிப்பாய், மே 07

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவி உயர்த்துவதற்கான 2019ஃ2020 போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தை வடக்கு மாகாணத்தில் உள்ள சகல திணைக்கள தலைவர்களும் பொருத்தமானவர்களுக்கு அறிவித்து செயலபடுத்துமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவிலும் பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியும் எனவும் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ- 5)

### 30 பவுண் தங்க ஆபணரங்கள்:

# வவுனியாவில் கொள்ளையடித்த போலி பொலிஸ் கும்பல் சிக்கியது!

வவுனியா, மே 07

பொலிஸ் என்று கூறி 30 பவுண் நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் மூன்று சந்தேகநபர்களை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியாநகர் மற்றும் தேக்கவத்தை பகுதிகளில் உள்ள கடந்த வாரம் வீடுகளுக்கு சென்ற இனம் தெரியாத நபர்கள், தங்களை பொலிஸார் எனக் கூறியுள்ளனர்.

பின்னர் வீட்டில் சோதனை செய்வது போல பாசாங்கு செய்துவிட்டு இரு வீடுகளில் இருந்தும் 30 பவுண் தங்க ஆபரணங்களை களவாடிக் கொண்டு தப்பிச்சென்றிருந்தனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்றன.

இதன் அடிப்படையிலேயே இந்தக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தப்படபவுள்ளனர். (ஐ)

# குளவி கொட்டி இருவர் பாதிப்பு

கிளிநொச்சி, மே 07

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் உரம் பெறுவதற்காக சென்ற இருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காக தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கமநல சேவை நிலையத்தில் மரம் ஒன்றிலிருந்த குளவிகளே இவர்களை கொட்டின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்றுள்ளது.

அங்கு குளவிகள் இருப்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதாகவும் அதனை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதி மூட்டப்பட்டது

## சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

கொழும்பு, மே 07

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதி மூடப்பட்டுள்ளமையால், அந்த வீதியால் பயணம் செய்யும் பலரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், பல கிலோ மீற்றர் தூரம் சுற்றி பயணிக்கவேண்டிய நிலை காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று காரணமாக கொடிகாமம் வடக்கு மற்றும் மத்தி ஆகிய இரு கிராம சேவையலாளர் பிரிவு கடந்த 5ஆம் திகதி முதல் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த இரு கிராமங்களும் அமைந்துள்ள பகுதியூடாக செல்லும் கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது. அந்த வீதியில் கடமையில் இருக்கும் இராணுவத்தினரே வீதியூடான போக்குவரத்துக்கு தடை விதித்துள்ளனர்.

அதனால் தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களுக்கு சென்று வருவோர் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், பல கிலோ மீற்றர் தூரம் பயணித்து வேறு வீதிகளூாடாக பயணிக்கின்றனர்.

இது குறித்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, " பிரதான வீதிகளினூடான போக்குவரத்தினை தடை செய்யவில்லை எனவும், குறித்த இரு கிராமங்களுக்குள் உட்செல்ல, வெளியேற மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று தொடங்கின!



கொழும்பு, மே 07

ரஷ்யாவிலிருந்து கடந்த 4 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி போடும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

கொலன்னாவை - கொத்தொட்டுவ பிரதேசத்திலுள்ள மக்களுக்கு முதல் கட்டமாக இந்த தடுப்பூசி வழங்கப்பட்டது. 30 வயது தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

குறித்த பிரதேசத்தில அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையால் முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி வழங்கும் செயல்திட்டத்தில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் ,

இவ்வருட இறுதிக்குள் 130 இலட்சம் ஸ்புட்னிக் தடுப்பூசி இலங்கைக்கு வழங்கப்படும் என்று அதனை தயாரிக்கும் ரஷ்ய நிறுவனம் உறுதியளித்துள்ளது.

இந்த தடுப்பூசியும் இரண்டு கட்டமாக வழங்கப்பட வேண்டும். முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர் 3 வாரங்களின் பின் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்க வேண்டும்.

எனவே, ரஷ்யாவிடமிருந்து கிடைக்கப் பெறும் தடுப்பூசிகளை நாட்டில் 35 இலட்சம் மக்களுக்கு வழங்க முடியும்.

இலங்கையில் 135 இலட்சம் மக்களுக்கு தடுப்பூசி வழங்க வேண்டிய தேவையுள்ளது. இவர்களில் ஒரு தொகுதியினருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசிகளை வழங்க முடியும்.

உலகில் இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கோவிட் தடுப்பூசிகளில் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# எரிவாயு விலையை உயர்த்தாவிடின் விரைவில் தட்டுப்பாடு ஏற்படும்!

## லாப் எரிவாயு நிறுவன தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, மே 07

சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை அதிகரிப்பதற்கான அனுமதியை வழங்காவிடில், நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் என லாப் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யு.கே.எச். வெகபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

“சமையல் எரிவாயு இறக்குமதிக்கு செலவாகும் தொகைக்கு இணையாக சமையல் எரிவாயு விநியோகத்துக்கான செலவு காணப்படுகிறது. இது பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆகையால், சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்வதில் பெரும் நட்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

எரிவாயு நிறுவனங்கள் நட்டமடையாமல் கொண்டு செல்வதாயின், 12.5 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 421 ரூபா அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடைபெறாவிடின், நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவும் நிலை ஏற்படும்” என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.